
# திருக்கோயில்




பிப்ரவரி
1999

விலை
ரூபாய் ஐந்து



சிவபெருமான் நடனத் திருக்கோலம் - ஊர்த்துவ தாண்டம்



# திருக்கோயில்



திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| | | | |
|---|---|---|---|
| மாலை 41 | திருவள்ளுவர் ஆண்டு 2030 பிப்ரவரி 1999 | வெகுதானிய ஆண்டு மாசி | மணி 2 |



### சிறப்பாசிரியர்

**சுகவனேஸ்வர்**, இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

### ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்.டி.,

### திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.,
கூடுதல் ஆணையாளர்

**திரு த. சுந்தரம்,** பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திரு மு. இராமச்சந்திரன்,** பி.ஏ.,
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திரு தி. ஜெயராமன்,** பி.ஏ.பி.எல்.,
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


### முகப்பு

பழநி தங்கரத முருகர்

### பொருளடக்கம்


*வள்ளலார் பணிமன்றம் நடத்திய தேவார மூவர் இசைக்கலை விழாவில் ''திவ்வியப் பிரபந்தத் திருநாளில்'' அறநிலையத்துறை சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர் இ.ஆ.ப. அவர்கள் ஆற்றிய சிறப்புரை*

*சிதம்பர ரகசியம்*
- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

*பெண்பால் திருமால் அடியார்கள்*
- திருமதி இராஜலட்சுமி கோபாலகிருஷ்ணன்

*திருமாலின் திருவருள்*
- பி. பத்ரிநாத் ராமானுஜ தாசர்

*கம்பன் காட்டும் பரதன்*
- முனைவர் இரா. செல்வகணபதி

*கம்பனும் திருமுறைகளும்*
- கம்பன் கவிநயமணி வே. தியாகராசன்

*தைப்பூசம்*
- முனைவர் த. அமிர்தலிங்கம்

*இராகு நவகிரகமான வரலாறு*
- பட்டம்மாள் ஆனந்தா

*மகாவித்துவான் பிள்ளையவர்களின் பெருமை*
- அங்கயற்கண்ணி அடிமை



*உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :*

**உயர்திரு ஆணையாளர் அவர்கள்**

**திருக்கோயில்**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*

## வள்ளலார் பணிமன்றம் நடத்திய தேவார மூவர் இசைக்கலை விழாவில் 'திவ்வியப் பிரபந்தத் திருநாளில்' அறநிலையத்துறை சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர் இ.ஆ.ப. அவர்கள் ஆற்றிய சிறப்புரை

தமிழிசையின் சிறப்பு நாம் அனைவரும் அறிந்த ஒன்று

''வெந்தழல் நீராகும், வெள்ளெலும்பு பெண் ஆகும்
வந்தமத வேழம் வணங்கிடுமே - சந்தமெழப்
பாடுவார் உள்ளுருகிப் பாடும் தமிழிசைக்கு
நீடுலகில் உண்டோ நிகர்''.

இத்தகைய தமிழிசைக்கு இன்றைக்கு அரும் பணிகள் ஆற்றிவரும் வள்ளலார் பணிமன்றம் நடத்தும் தேவார மூவர் இசைக் கலை விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மனமகிழ்ச்சி அடைகிறேன்.

வள்ளலார் பணிமன்றம் ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற அப்பரடிகளின் அருள் வாக்கிற்கு இணங்க தமிழுக்கும் தமிழிசை வளர்ச்சிக்கும், ஆன்மீக வளர்ச்சிக்கும் அரும்பணிகள் பலவற்றைத் தொடர்ந்து தொய்வில்லாமல் நடத்தி வருவது பாராட்டிற்குரியது.

நம்முடைய சங்கீத வித்வத் சபையும் இசைத் தமிழுக்கு ஆற்றிவரும் அரும்பணிகளைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை என்றுதான் கூறவேண்டும்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய பெருமை உடையது நம் செந்தமிழ் மொழி. பன்னெடுங்காலத்திற்கு முன்பே நம் தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழாகச் சிறப்புற்று விளங்கியது என்பதை நமக்கு நம் பண்டைய இலக்கியங்கள் யாவும் படம் பிடித்துக் காட்டுகின்றன.

தமிழின் மிகத் தொன்மையான இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பியத்திலேயே தமிழிசைக் குறிப்புகள் சிறப்புற இடம்பெற்று விளங்குகின்றன.

கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் தோன்றிய தமிழ்க் காவியம் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம். பண்டைய தமிழ் மக்களின் இசைக் கருவூலமாகச் சிலப்பதிகாரம் விளங்குவதைக் காணுகின்றோம். அதன் தொடக்கத்திலேயே மங்கல வாழ்த்துப் பாடலைக் காணுகின்றோம்.

''ஞாயிறு போற்றுதம் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரி போல் பொற்கோட்டு
மேரு வலந் திரிதலான்''

''திங்களைப் போற்றுதம் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச் சென்னி குளிர்வெண்குடை போன்றிவ்
அங்கண் உலகு அளித்தலான்''

''மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்கு அவன் அளி போல்
மேல் நின்று தான்சுரத்தலான்''


என்று தொடங்கிச்சிலப்பதிகாரம் முழுதும் முத்தமிழ்க் காப்பியமாக விளங்குவதைக் காணுகின்றோம்.

இதனை அடுத்து கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் சைவத்தில் காரைக்கால் அம்மையாரும், வைணவத்தில் முதல் ஆழ்வார் பெருமக்களும் தோன்றி இசையால் இறைவனை இசைய வைக்கமுடியும் என்பதை உணர்த்தும் வகையில் அருமையான இசைப் பாடல்களைப் பாடி உருகிப் போற்றியிருக்கக் காண்கின்றோம்.

காரைக்கால் அம்மையார் காலத்தால் முற்பட்டவர் என்பதால் அவர் பாடிய பதிகம் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் எனவே வழங்கப் பட்டு வருகின்றது.

நட்டபாடை பண்ணிலும் இந்தளம் பண்ணிலும் அமைந்து விளங்குகின்றது அவர் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்.

''சூடு மதியம் சடைமேல் உடையார்
சுழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையில் ஆர்த்த
அடிகள் அருளாலே
காடுமலிந்த கனல்வாய் எயிற்றுக்
காரைக்கால் பேய்தன்
பாடல் பத்தும் பாடி ஆடப்
பாவம் நாசமே''



என்று அவர் இந்தளப் பண்ணில் பாடியுள்ள பாடல் பாட நம் பாவமெல்லாம் தீரும் என்று அவரே பாடல் பலனும் கூறிப் பாடியிருத்தலைக் காணுகின்றோம்.

இவரை அடியொற்றி இவருக்குப் பின்னால் தோன்றிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசு சுவாமி களும் அற்புதமான பதிகங்களைப் பாடி உருகிப் பக்திஇயக்கத்தைத் தமிழகத்திலே தழைக்கச் செய்து அரும்பணி ஆற்றி உள்ளார்கள். களப்பிரர்களும் அவர்களைத் தொடர்ந்து ஆண்ட பல்லவ மன்னர்கள் சிலரும் தமிழகத்திற்கே உரிய கலைகளை, கலாச் சாரத்தை மறக்கவும், மறைக்கவும் முற்பட்ட கால கட்டத்தில் முத்தமிழ் விரகராம் நம் திருஞானசம்பந்தர் தாம் பாடிய திருப்பதிகங்கள் தோறும் தமிழைப் பற்பல அடைமொழிகள் கொடுத்துச் சிறப்பித்து தமிழுக்காக வீறுகொண்டு போராடிய போராட்டங்கள் மகத்தானவை.

''திருநெறிய தமிழ்'' என்றும்
''செந்தமிழோர்கள் பரவி ஏத்தும் தமிழ்'' என்றும்
''குன்றாத் தமிழ்'' என்றும்
''சொல்லார் தமிழ் மாலை'' என்றும்
''தகைமலி தண்டமிழ்'' என்றும்
''ஞாலம் மிக்க தண்டமிழ்'' என்றும்

''ஞாலம் மல்கும் தமிழ்'' என்றும் பதிகம்தோறும் தமிழுக்கு அவர் வழங்கியுள்ள அடைமொழிகள். செந்தமிழைக் காப்பதற்கும், நிலைநிறுத்துவதற்கும் அவர் மேற்கொண்ட அரும்பெருந்தொண்டினை அறிவிப்பனவாக விளங்குகின்றன.

''புனலில் ஏடுஎதிர் போகெனப் போகுமே
புத்தனார் தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடுஇட பச்சென்று இருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே.
பழைய என்பு பொற்பாவை அதாக்குமே
சினவரா வெவ்விடம் தீர்கெனத் தீர்க்குமே
செய்ய சம்பந்தர் செழுந்தமிழ்ப்பாடலே''

என்று திருஞானசம்பந்தர்தம் திருப்பதிகங்கள் செய்த அற்புதங்களை எல்லாம் பட்டியல் இட்டுக் காட்டு கிறார்கள் நம் அருளாளர் பெருமக்கள்.

இவ்வாறு நாளும் இன்னிசையால் தமிழ் பரப் பிய பெருமை காரணமாக ஞானசம்பந்தரை ''தமிழ் ஞானசம்பந்தர்'' என்றே உலகம் போற்றிக் கொண் டாடுகின்றது.

அப்பரடிகள் ''தமிழோடு இசைப் பாடல் மறந்தறியேன்'' என்று உறுதி கூறியுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் தமிழ்மேல் கொண்ட காதலால் இறைவன், வேதமும், திருமால், பிரம்மாக் களும் காணமுடியாத தம்பாதம் தோயத் திருவாரூர் வீதிகளில் தூதாக நடந்து சென்று தம் தமிழ் இசைக் காதலை மெய்ப்பித்துள்ளான்.

ஏழிசையாய் இசைப் பயனாய இறைவன் விளங்குவதையே நமக்குத் தேவாரம் உணர்த்து கின்றது.

காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதினால் இறைவன் அடியார் இருக்கும் இடம் தேடி ஓடி வரு வான் என்பதை நமக்குப் பல வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அசுவதரன், கம்பளன் எனும் இரு கந்தர்வர்கள் ஈசனிடம் கேட்டுக்கொண்டார்களாம், ''இறைவா! எங்கள் இசையை நீ எப்போதும் கேட்டுக் கொண்டே இருக்கவேண்டும்''

''அவ்வாறே செய்வோம்'' என்று வரம் அளித்து இறைவன், அக்கந்தர்வர்களைத் தோடு களாக்கிக் காதுகளில் அணிந்து கொண்டபடியால் 'தோடுடைய செவியன்' ஆனார் என்று பாராட்டப் படுவகையும் காணுகின்றோம்.

இன்றைய தினம் திவ்வியப் பிரபந்தத் திருநாள்,

ஒவ்வொரு நாளையும் இங்கே வள்ளலார் நாளாக, ஞானசம்பந்தர் நாளாக, அப்பர் நாளாக, சுந்தரர் நாளாகக் கொண்டாடி அவர்களுடைய இசைத் தொண்டைப் பாராட்டித் தக்க அறிஞர்களைக் கொண்டு பேசச் செய்தும், இசை வாணர்களைக் கொண்டு பாடச் செய்தும், அரிய சேவையை நம் முடைய வள்ளலார் பணிமன்றம் செய்து வரு கின்றது.

இன்றைக்குத் திவ்வியப் பிரபந்தத் திருநாள். ஆழ்வார் பெருமக்கள் ஞானத் தமிழ்பாடி இசைத் தமிழுக்கு மகத்தான சேவையைச் செய்துள்ளார்கள்.

**''அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாக**
**இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி**
**ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு**
**ஞானத் தமிழ்புரிந்த நான்''**

என்கிறார் பூதத்தாழ்வார்.

பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ் வார் - ஆகிய இம்மூவரும் காலத்தால் முற்பட்டவர்கள் ஆதலால் இவர்களை முதலாழ்வார்கள் என்று சிறப்பிக்கின்றோம்.

தனித்தனியாகத் தலயாத்திரை செய்து எம் பெருமான் பெருமையைப் பாடிவந்த இம்மூவரும் திருக்கோவிலூர் மிருகண்டு முனிவர் ஆசிரமத்தில் கொட்டும் மழையில் ஒன்றுகூடுகிறார்கள்.

**ஒருவர் படுக்கலாம்,**
**இருவர் அமரலாம்**
**மூவர் நிற்கலாம்**

என்று ஒரு சிறிய இடத்தில் இம்மூவரும் ஒருவருக்கு ஒருவர் இடம்கொடுத்து அளவளாவிக் கொண்டிருந்த வேளையில் இம்மூவரின் ஞானத் தமிழுக்கு மயங்கிய இறைவன் - எம்பெருமான் அங்கேயே தோன்றி அவர்களுக்குக் காட்சி கொடுத்தான் என்பது வரலாறு.

மூவரும் நெருங்கி நின்றிருந்தபோது மேலும் ஒருவர் வந்து நெருக்குவதாக முதலாழ்வார்கள் உணர்ந் தார்கள். யார் எங்களை நெருக்குவது? என்று கேட்ட போது இறைவனின் திருக்காட்சி கிடைக்கின்றது.

**''திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்**
**அருக்கன் அணிநிறமும் கண்டேன் செருக்கிளரும்**
**பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்**
**என்ஆழி வண்ணன்பால் இன்று''**

இசைக்கு உருகும் இறைவன் முதலாழ்வார் பெருமக்களின் தீந்தமிழ்ப் பாடல்களைக் கேட்கத் திருக்கோவிலூருக்கே ஓடிவந்தான் என்பதை இவ்வர லாறு காட்டுகின்றது.

திருமழிசை ஆழ்வாரின் சீடன் கணிகண்ணன். ஒரு மூதாட்டி தினந்தோறும் ஆழ்வாரின் ஆசிரமத்தைக் கூட்டிப் பெருக்கி நீர்தெளித்துக் கோலம் இட்டு அழகு செய்துவந்த தொண்டினைப் பாராட்டி 'உனக்கு எது விருப்பமோ அதுகேள் தருகின்றேன்' என்றான் கணிகண்ணன். அம்மூதாட்டி கிழப்பருவம் நீங்கி இளமைபெற வேண்டும் என்றாள். திருமழிசை ஆழ் வாரின் திருவருளால் அம்மூதாட்டி இளமை வரம் பெற்றாள்.

## அப்பர் பாடல் அற்புதங்கள்

**தலைகொள் நஞ்சு அமுதாக விளையுமே**
**தழல்கொள் வீடு தடாகம் அதாகுமே**
**கொலைசெய் யானை குனிந்து பணியுமே**
**கோளராவின் கொடுவிடம் தீருமே**
**கலைகொள் வேத வனப்பதி தன்னிலே**
**கதவு தானும் கடுகத் திறக்குமே**
**அலைகொள் வாரியிற் கல்லும் மிதக்குமே**
**அப்பர் செப்பும் அருந்தமிழ்ப் பாடலே.**

காஞ்சி ஆண்ட மன்னன் அவள் இளமையும் அழகும் கண்டு அவளைத் திருமணம் செய்து கொண்டான். ஆண்டுகள் போகப் போக அரசன் முதுமைக் கோலம் கொண்டான். மங்கையோ என்றும் பதினாறாக இளமை மாறாதிருந்தாள்.

அவள் இளமைக்கு என்ன காரணம் என்று கேட்ட மன்னன் நிகழ்ந்ததை அறிந்தான். கணிகண்ணனை அணுகித் திருமழிசை ஆழ்வாரிடம் பரிந்துரைத்து தனக்கும் மாறா இளமை தந்தருளக் கோரினான்.

''திருமழிசை ஆழ்வார் அவ்வாறு செய்யார்' என்றான் கணிகண்வன்.

''அப்படியானால் நீரே எமக்கு இளமை தருக'' என்று கணிகண்ணனை மன்னன் வேண்டினான்.

''தன்னால் ஆகாது'' எனக் கணிக்கண்ணன் மறுத்துவிட, ''என் நாட்டை விட்டு வெளியேறு'' என்று கணிகண்ணனை நாடு கடத்தி ஆணையிட்டு விட்டான் அரசன்.

இதனை அறிந்த திருமழிசை ஆழ்வார் ''கணிகண்ணன் நாட்டைவிட்டு வெளியேறுவானே ஆனால் நானும் இந்நாட்டை விட்டுப் புறப்படுகின்றேன். பெருமாளே நீயும் உந்தன் பாம்புப் படுக்கையைச் சுருட்டிக் கொண்டு கிளம்பு'' என்று திருவெஃகாவில் பள்ளிகொண்டிருந்த பெருமாளை நோக்கிப் பாடினார்.

''கணிகண்ணன் போகின்றான் காமரூபூங்கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா - துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்''

ஆழ்வார்களின் இசைத் தமிழுக்குக் கட்டுப்பட்ட இறைவன் அவ்வாறே தன் பாம்புப் படுக்கையைச் சுருட்டிக் கொண்டு, ஆழ்வாரின் பின்னே நடக்கலுற்றான்.

பெருமாள் புறப்பட்டதும் காஞ்சி மாநகரை இருள் சூழ்ந்துகொண்டது. நிகழ்ந்தது அறிந்த அரசன் ஆழ்வாரிடம் மன்னிப்பு பெறவேண்டி, ஓடிவந்தான்.

அன்றைய இரவு திருமழிசை ஆழ்வார், கணிகண்ணன், எம்பெருமான் மூவரும் தங்கி இருந்த இடம் ''ஓரிரவு இருக்கை'' என்று வழங்கப்பட்டு இன்று அந்த இடம் ''ஓரிக்கை'' என்று அழைக்கப்படுகின்றது.

மன்னன் அவ்விடத்திற்கே வந்து திருமழிசை ஆழ்வாரிடம் தன்னை மன்னிக்குமாறு மன்றாடினான்.

## சுந்தரர் பாடல் அற்புதங்கள்

வெங்கரா உண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை யானையின் மீதேறிச் செல்லுமே
மங்கை பாகனைத் தூது நடத்துமே
மருவி ஆறு வழிவிட நிற்குமே
செங்கல் ஆனது தங்கம் அதாகுமே
திகமும் ஆற்றிட்டுச் செம்பொன் எடுக்குமே
துங்க வான்பரி சேரற்கு நல்குமே
துய்ய நாவலூர்ச் சுந்தரர் பாடலே

''கணிகண்ணன் போக்கொழிந்தான்
காமரூபூங்கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டும் - துணிவுடைய
செந்நாப்புலவனும் போக்கொழிந்தேன்
நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்விரித்துக் கொள்''

என்று ஆழ்வார் பாட, பெருமாளும் விரைவாகத் திரும்பி திருவெஃகா வந்து பள்ளிகொண்டார்.

இவ்வாறு ஆழ்வாரின் ஞானத் தமிழிசைக்குக் கட்டுப்பட்டு ஆழ்வார் கூறிய வண்ணமே செயல் பட்டபடியால் பெருமாளுக்குச் ''சொன்னவண்ணம் செய்த பெருமாள்'' என்பது பெயர் ஆயிற்று.

இந்த வரலாறு குமரகுருபரசுவாமிகளாலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ''பைந்தமிழ் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டல்'' என்று பாடியுள்ளார் குமரகுருபரர்.

பன்னிரு ஆழ்வார்களில் ஒரு ஆழ்வாரின் திருப்பெயர் திருப்பாணாழ்வார் ஆகும்.

திருப்பாணாழ்வார் தாழ்ந்த குலத்திலே தோன்றியவரக இவர்தம் வரலாறு கூறுகின்றது. ஆனால் இவருடைய இசை மேல் திருவரங்கப் பெருமானுக்கு எத்தகைய காதல் என்பதை இவருடைய அருள் வரலாறு நமக்குக் காட்டுகின்றது.

லோகசாரங்கர் இவர் மேல் எறிந்த கல்லை இறைவன் தன்மேல் ஏற்றுக் கொண்டு உதிரம் பெருக நின்றான்.

''இன்னிசையால் எம்மைத் தொழும் பக்தர் அன்றோ பாணர். அவரைநோகடித்தல் ஆமோ! பாணர் பிரானை உம்தோள்மேல் ஏற்றி எம் சந்நிதிக்குக் கொணர்க'' என்று திருவரங்கப் பெருமானே கட்டளையிட்டார் என்றால் இசையின் மகத்துவத்தை என்னென்பது!

பாதாதி கேசமாகத் திருஅரங்கனைத் திருப்பாணாழ்வார் பாடி உருகிய ''அமலனாதிப்பிரான்'' 10 பாசுரங்களைக் கொண்டு விளங்குகின்றது.

''கொண்டல் வண்ணனைக் கோவலனாய்
வெண்ணெய்
உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணி அரங்கன் என்
அமுதினைக்
கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணாவே''

என்று பாடி உருகி அரங்கனிடமே ஐக்கியப்பட்டுவிட்ட திருப்பாணாழ்வார் சரித மகிமை, திவ்வியப் பிரபந்த இசையின் மகிமையே அல்லவா!

''மாதங்களில் நான் மார்கழியாக இருக்கின்றேன்'' என்று மாதவன் போற்றிய மாதம் மங்கல மார்கழி மாதம்.

''மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன்
நந்தகோபன் குமரன்

## ஆழ்வார்கள் அருளிய ஈரத்தமிழ்

ஆரப் பொழில் தென்குருகைப்
பிரான் அமுதத் திருவாய்
ஈரத் தமிழின் இசை உணர்ந்
தோர்கட்கு இனியவர்தம்
சீரைப் பயின்று உய்யும்
சீலம் கொள் நாதமுனியை நெஞ்சால்
வாரிப் பருகும் இராமாநுசன்
என்தன் மாநிதியே

- இராமாநுச நூற்றந்தாதி

ஏரார்ந்த கண்ணி யசோதை
இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம்
போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்''

என்று பீடு மிகுந்த மார்கழி மாதத்தில் திருப்பாவை முழங்காத இடம் ஏது? திருக்கோயில் ஏது?

திருப்பாவை இசைத் தமிழ் செய்த தவம் அல்லவா!

''பாதகங்கள் தீர்க்கும்
பரமனடி காட்டும்
வேதம் அனைத்திற்கும்
வித்தாகும் - கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு''

என்று ஆண்டாளின் இசைத் தமிழ் - திவ்வியப் பிரபந்தம் போற்றப்படுகின்றது என்றால் திவ்வியப் பிரபந்தத் திருநாளாகிய இன்று இவற்றை எல்லாம் எண்ணி எண்ணிப் போற்றிட கடமைப்பட்டுள்ளோம் நாம்.

''சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'' ஆண்டாளை வளர்த்து அரங்கனுக்கு ஆளாக்கிய பெருமை பெற்ற ஆழ்வார் பெரியாழ்வார்.

அவர் இறைவனுக்கே பாடி அளித்த இசைத் தமிழ் திருப்பல்லாண்டு.

''பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரத் தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா நின்
சேவடி செவ்வி திருக்காப்பு
அடியோ மோடும் நின்னொடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவார் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார்சோதி வலத்துறையும் சுடர்
ஆழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கும் அப் பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே''

பாண்டிய மன்னன் ஸ்ரீவல்லப தேவனுக்கு உண்மையான பரம்பொருள் திருமாலே என்பதை நிலைநிறுத்திக் காட்டினார் விஷ்ணுசித்தர்.

பொற்கிழி தானாகவே அறுந்து விஷ்ணு சித்தர் கரத்தில் விழுந்தது.

பரம்பொருள் உண்மையை நிலை நாட்டிய விஷ்ணுசித்தரை யானைமேல் ஏற்றி ஊர் வலம் செய்தான் பாண்டிய மன்னன்.

தன் மைந்தனுக்குச் செய்யப்படும் சிறப்பை நேரில் காண தந்தையே வந்ததைப் போல கருட வாகனத்தில் பிராட்டியரோடு எழுந்தருளினார் எம் பெருமான்.

எம்பெருமானுக்குக் கண்ஏறு பட்டுவிடக் கூடாது என்று திருப்பல்லாண்டு பாடியருளினார் விஷ்ணுசித்தர்.

எம்பெருமானுக்கே பல்லாண்டு பாடிய காரணத்தினால் விஷ்ணுசித்தர் ''பெரியாழ்வார்'' ஆனார் என்று இவர்தம் வரலாறு கூறுகின்றது.

இன்றைக்குத் 'திருப்பல்லாண்டு' இசைக்கப் பெறாத திருக்கோயிலே இல்லை என்று கூறலாம்.

நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் திருப்பல் லாண்டிற்குத்தான் முதலிடம்.

வைகுண்ட ஏகாதசிக்கு முன் உள்ள பத்து நாட்களில் பகல் பத்து உற்சவமும், பின் உள்ள பத்து நாட்களில் இராப்பத்து உற்சவமும் கொண்டாடப் பட்டு இந்த 20 நாட்களில் நாலாயிரத் திவ்விய பிரபந்தம் முழுவதும் ஓதப்படுவது குறிப்பிடத்தக்க வைபவம் ஆகும்.

நம்முடைய கலைமாமணி டாக்டர் கோ. சீர் காழி சிவசிதம்பரம் அவர்கள் நமக்கு இன்றைக்குத் திவ்வியப் பிரபந்த இசையமுதை இங்கே வழங்க இருக்கிறார்கள்.

திவ்வியப் பிரபந்தத்தை அடியொற்றியே இன்றைக்கு நம் அறநிலையத்துறை 108 திருமால் போற்றிகளைத் தொகுத்து அச்சிட்டு வெளியிட் டுள்ளது. அதைப் போலவே திவ்வியப் பிரபந்தத்தி லிருந்தே 108 தாயார் போற்றிகளையும் அதைப் போலவே திருமால் மற்றும் தாயார் 1008 போற்றி களையும் தொகுத்து அச்சிட ஆவன செய்து வரு கின்றோம்.

அதைப் போலவே தேவார, திருவாசகங் களிலிருந்து அருள்மிகு சிவபெருமான் 108 போற்றி, 1008 போற்றி, அருள்மிகு உமையம்மை 108 போற்றி, 1008 போற்றிகளைத் தொகுத்து வெளியிட்டு வரு கின்றோம்.

இன்றைக்கு எத்தகைய ஞானத்தமிழை நம் ஆழ்வார் பெருமக்களும், சமயகுரவர்களும் வலி யுறுத்திச் சென்றார்களோ அவற்றை எல்லாம் இந்து சமய அறநிலையத்துறை மிகச்சிறந்த தமிழ் அறிஞர் பெருமக்களைக் கொண்டு தொகுக்கச்செய்து அவற் றைப் போற்றி நூல்களாக வெளியிட ஆவனச் செய் துள்ளது என்பதை இந்த அவையிலே நான் மிகவும் பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன்.

அன்றைக்கு நாதமுனிகள் நமக்கு திவ்விய பிரபந்தத்தை அரும்பாடுபட்டுத் தொகுத்துத் தந் தார்கள். அதே காலகட்டத்தில் வாழ்ந்திருந்த நம்பி யாண்டார் நம்பிகள் நமக்கு தேவாரத்திருப்பதிகங் களைத் தேடித் திருமுறைகளாக வகுத்துத் தந்தார்கள்.

அத்தகைய தமிழ்ப்பணியை ஆற்றியதால் இன்றும் அவர்கள் நம்மிடையே இறவாத இன்பப்புகழோடு வாழ்ந்து வருகின்றார்கள்.

நாதமுனிகளைப் போலவும், நம்பியாண்டார் நம்பிகளைப் போலவும் தமிழிசைக்குத் தொடர்ந்து தொண்டாற்றிவரும் தமிழ்ச் சான்றோர்கள்தாம் நம் முடைய அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களும், சங்கித வித்வத் சபையின் தலைவர் திருவாளர் டி.டி. வாசு அவர்களும்.

இவர்களின் தமிழிசைப் பணியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

''தத்தளித்து நின்ற தமிழிசைச் செல்விக்குப் புத்துயிரை ஊட்டிய நற் புண்ணியவான்'' களாக விளங்கும் அருட்செல்வர் மகாலிங்கம் அவர்களை யும், இசைக் கலைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள டி.டி. வாசு அவர்களையும் ஆழ்வார் களின் திருவாக்கினாலேயே ''பல்லாண்டு பல்லாண்டு வாழ்க'' என வாழ்த்தி வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

நன்றி. வணக்கம்.

★★★

# சிதம்பர ரகசியம்

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

கல்விச் செருக்கினால் ஆணவம் கொண்டிருந்த ரிஷிகளைத்திருத்தவும், அவர்களுக்கு உண்மை ஞானத்தைப் போதிக்கவும் கயிலாயபதி, திருமாலுடன் தாருகா வனம் சென்றார்.

தாருகாவனத்திலிருந்த மகரிஷிகளின் மனம் தடம் புரண்டது. 'தவம் செய்தோம்! சாதாரண மக்களுக்குக் கிடைக்க முடியாத புத்தியும், சக்தியும் நமக்குக்கிடைத்திருக்கிறது; நாம் தானே இந்த உலகில் பெரியவர்கள், என்றும், 'ஆம்! நாம்தான் பெரியவர்கள், சந்தேகமில்லாமல், மக்களை வழிப்படுத்த நாமே போதுமே, இறைவன் எதற்கு? மனிதர்களுக்கு அவர்களுடைய கர்மாவே பலனை அளிக்கிறது; கடவுள் என்ற ஒன்றே தேவையில்லை. என்றும் 'என் அபிப்பிராயப்படி கடவுளே இல்லை என்றும் நாத்திகவாதம் செய்துகொண்டு, வாய்க்கு வந்தாற் போல் பேசிக்கொண்டிருந்தார்கள்.

முனிவர்களின் கவனத்தைக் கலைத்தது அந்தக் காந்தக் குரல்!

''முனிவர் பெருமக்களே, பசித்து வந்திருக்கிறேன். பிச்சை அளிப்பீர்களா''? என்று,

முனிவர்களுக்கு வந்திருப்பவன், வாட்டமே தென்படாத, வாளிப்பான உடம்புடன் இருந்ததில், 'இவன் பிச்சைக்காரனா' என்று ஆலோசித்தார்கள்....

அதற்குள் உள்ளிருந்த ரிஷிபத்தினிகளின் காதுகளிலும் இக்குரல் கேட்டதில், அவர்களும் வெளியில் வந்து பார்த்தனர். பிச்சைக்கேட்க வந்தவரின் அழகிய தெய்வீக வடிவத்தைக் கண்டு, 'ஆகா, சூரியனே இறங்கி வந்தாற்போல் ஒளி வீசுகிறதே' என்று பிரமித்தார்கள்; அவரிடம் வைத்த பார்வையை அகற்ற இயலாமல் இருந்தது. இதைக் கண்ட முனிவர்கள், முகம் சுளித்தார்கள். மனம் கசந்து, என்ன நினைக்கிறோம் என்பதையும், தம் தவ வலிமையால் வந்திருப்பது யார் என்பதையும் அறியா வண்ணம் அறிவில் இருண்டார்கள்.

''பார்த்தீர்களா, நம் பத்தினிகளை, அவன் பின்னால் போகவும் தயங்கமாட்டார்கள்; அதனால் அவனை விட்டு வைப்பது கூடாது, அழித்து விடுவோம் அவனை என்று பலவாறு ஆவேசப்பட்டு அழிக்கவும் முற்பட்டனர்.

தங்களின் தவ வலிமையால் யாகக் குண்டத்திலிருந்து ஒரு யானையைத் தோன்றச் செய்தார்கள். அதை ஏவி விட்டு, 'போய், அந்த வசியக்காரனை தீர்த்து விடு' என்று அனுப்பினார்கள்.

பிட்சாடனராக வந்திருப்பது பெருமானே என்பதையும், ரிஷிபத்தினிகள். பக்தியினால்தான் மன முருகி நின்றார்கள் என்பதையும் உணராத முனிவர்களுக்குப் பாடம் கற்பிக்க முனைந்தார் சிவபெருமான்.

ஆவேசமாக வந்த யானையை திரிசூலத்தால் தாக்கினார். யானையை வீழ்த்தி, உரிக்க முடியாத அதன் தோலை உரித்து இடையில் அணிந்து, 'கஜசம்ஹார' மூர்த்தியானார்.

முனிவர்களும், 'புலி'யை ஏவ, அதையும் கொன்று, புலித்தோலை இடையில் அணிந்தார்.

வந்தவன் வலிமை மிக்கவன் என்பதை உணர்ந்து, யானையை வீழ்த்தி, அதன் தோலை உரித்தும், புலியை அடித்து அதன் தோலை உரித்து இடையில் அணிந்ததைக் கண்டவுடன் முனிவர்கள் மேலும் கோப மடைந்து, ஒரு பயங்கர பூதத்தை எழுப்பி அனுப்பினார்கள்.

சிவபெருமானும் பிரம்மாண்டமான உருவம் கொண்டார். அந்த பூதம் அப்ஸ்மாரம் என்ற பூதமாகும், அதைக் காலால் மிதித்து தன் வலது பாதத்தின் கீழ் போட்டு வதம் செய்தார்.

மேலும் முனிவர்கள் ஏவிய கொடிய நச்சுப் பாம்புகள், தீப்பிழம்பு, தந்திரமாகக் கொல்வதற்கு மந்திரசக்திகளுடன் அனுப்பப்பட்ட மான், உடுக்கை போன்றவற்றை சிவபெருமான், நச்சுப்பாம்புகளை ஆபரணங்களாகவும், இடதுகையில் அக்னியை ஏந்தி, மான், உடுக்கை போன்றவற்றை ஏந்திப் பாம்புகளை அணிகலன்களாகவும் உடலில் ஏந்தி ஆனந்த

நடனம் செய்தார். வேதங்களைப் பாத சிலம்புகளாக அணிந்து தம் விரி சடை எண்திசைகளும் விரித்தாட, நாதாந்தத் திருநடனம் நிகழ்த்தினார். அண்ட சராசரங்கள் குலுங்க சர்வேஸ்வரன் ஆடிய ஆனந்த தாண்டவத்தைக் கண்டு தாருகாவனத்து ரிஷிகள் மட்டுமல்ல... அவருடன் சென்ற நந்திதேவரும், மகாவிஷ்ணுவும் பேரானந்தத் தில் திளைத்தனர்.

இதைக்கண்ட முனிவர்கள், 'வந்தவன் மாயாவி அல்ல, மகாதேவனே' என்றறிந்து, 'ஈஸ்வரா', என்று அவரை வணங்கி பிரார்த்தித்தனர். இறைவனும் திருவாய் மலர்ந்து, ''முனிவர்களே 'கல்வி' கற்பது மனிதன் மேம்பட, தவமோ மனிதர்களுக்குள்ளும் தேவத்தகுதியைப் பெறுவதற்கே; ஆனால் நீங்களோ, தவ வலிமையைக் கொண்டு, கர்வம் கொண்டீர்கள். அது தர்மத்திற்கு விரோதம்; தவத்தின் புனிதத்திற்கே கேவலம்; இனி உங்கள்அகந்தையை அழித்து, அறிவில் தெளிவு பெறுவீர்களாக'' என்று அருளினார்.

முனிவர்களும் பிழையுணர்ந்து, பலவாறு பதறித் துடித்தார்கள். ''பிச்சாடனராக வந்த பரமேஸ்வரனே! அறியாமல் தவறு செய்தோம்; மன்னிப்பு என்ற பிச்சையை எமக்கு அருள வேண்டும் தேவ தேவா! தங்களின் ஆட்டத்தின் மூலம் அனைத்தையும் ஆட்டுவிப்பவர் தாங்களே என்பதை உணர்ந்து கொண்டோம்'' என்றார்கள்.

சிவபெருமான், ஸ்ரீ நடராஜப்பெருமானாக, திருத்தாண்டவம் ஆடியதைக் கண்டு களித்து சிவ பக்தர்கள் ஆனார்கள். அன்றைய தினமே இன்றும் கொண்டாடப்படும் 'ஆருத்ராதரிசனம்' எனும் வைபவம் ஆகும். மார்கழி மாதம், திருவாதிரை நட்சத்திரத்தில் கூடிய நன்னாளில், சிதம்பரத்தில் வெகு விமரிசையாக அணுவின் இயக்கத்தை நிகழ்த்தும் இறைவனே அண்டத்திலும் ஆட்டத்தை நடத்துகிறான்.

அன்று ... முதன் முதலாக எம்பிரான் பொற்பாதங்கள் எடுத்தாடிய இந்த நடனமே, தில்லையில் அவர் ஆடிய ஆனந்தத் திருநடனத்திற்குக் காரணமாக அமைந்தது.

## 'தைப்பூச'த்திருநாள்

திருப்பாற்கடலில் ஆனந்த சயனத்தில் ஆழ்ந்திருந்த திருமாலிடத்தில் தெரிந்த மாற்றம் ஆதிசேஷனுக்குப் புதிராக இருந்தது.

எப்பொழுதும், சயனத்தில் லேசாக இருக்கும் பெருமாள், இன்று சற்றுக் கனமாக இருப்பது போல் தோன்றிற்று.

ஈசனுடன் 'தாருகாவனம்' சென்று வந்தது தான் இம்மாற்றத்திற்குக் காரணம் என்றும் யோசித்த ஆதிசேஷன், ''பிரபு! தாங்கள் தாருகாவனம் சென்று வந்தபின்தான் தங்கள் மேனியின் பாரம் சற்று அதிகப்பட்டிருப்பதுபோல் உள்ளதே! அதன் காரணம் அடியேன் அறியலாமா?'' என்று கேட்டார்.

திருமாலும், ''ஆம், தாருகாவனத்தில் ஈசனின் திருநடனத்தை நாம் கண்டதால் ஏற்பட்ட ஆனந்தமே எம்திருமேனியின் பாரத்திற்குக் காரணம்'' என்று தாம் கண்டு வந்த ஆனந்தக் கூத்தனின் பெருமைகளைக் கூறத்தொடங்கினார்.

பரந்தாமன் சொல்வதைக் கேட்கக் கேட்க ஆதிசேஷனுக்கு ஆசைஏற்பட்டது. ஈசனின் திருநடனத்தைக்காணும், வேட்கையை - தன் விருப்பத்தை மெல்ல வெளிப்படுத்தினார்.

மகாவிஷ்ணுவும் மகிழ்ந்து, ''ஆதிசேஷா! உன் விருப்பப்படி திருநடனத்தைக் காண, சர்வேஸ்வரனை நோக்கித் தவம் இயற்று, அவர் 'அருளால் திருநடனத்தைக் காணும் பேறு கிட்டும்''! என்று அருளினார்.

பரந்தாமனின் ஆணைப்படி, ஆதிசேஷனும் சர்வேஸ்வரனைக் குறித்து தவம் செய்ய, ஈசனும் தோன்றி, ''ஆதிசேஷ! உன் வேண்டுகோளின்படியே யாம் பூவுலகத்தில் ஆனந்தத் தாண்டவம் ஆடி காட்சி அளிக்கிறோம். ஆனால் அதற்குரிய வேளைக்காக நீ சிறிது காலம் காத்திருக்க வேண்டும். வியாக்ரபாதர் என்ற முனிவர் உன்னைப் போலவே என் நடனம் காணக் காத்திருக்கிறார்; நீயும் அவரோடு சென்று காத்திருக்கவும். மேலும் ஓர் செய்தி சொல்வேன் கேள்!

முன்னொரு சமயம், அத்திரி முனிவரும், அனுசூயையும், திருமாலை நோக்கித் தவமியற்றினார்கள். திருமாலும் அவர்கள் விருப்பப்படி உன்னைப் பிள்ளையாகப் பெற வரமருளினார். இந்த வேளை, அவர்கள் விருப்பம் நிறைவேறவும், உன் கோரிக்கை நிறைவேறவும் தகுந்ததே. அதனால் நீ அவர்களிடம் செல். அவர்கள் கரத்திலிருக்கும் நீரின் வழியே, 'நீ குழந்தையாகத் தோன்றுவாய். உடனே அவர்கள் பதற்றத்துடன் உன்னைக் கீழே போட்டு விடுவார்கள். இதனால் உனக்குப் 'பதஞ்சலி' என்று பெயர் ஏற்படும். நாம் குறிப்பிட்ட இடத்தில் சென்று காத்திருப்பாயாக'', என்று அருளினார். மேலும் ஈசன்

'தை'மாதத்தில் குரு வாரத்தில், பூச நட்சத்திரம் பௌர்ணமியும் சேர்ந்து நிறைந்த நாளில் எம் ஆனந்தத் திருநடனத்தைக் காணலாம்' என்று கூறியருளினார். ஆதிசேஷனும் மகிழ்ச்சிப் பெருக்குடன் விடை பெற்றுச் சென்றார்.

திருமாலின் வரத்தின்படி, அத்திரி முனிவருக்கும், அனுசூயைக்கும் மகனாகத் தோன்றினார். 'பதஞ்சலி' என்று அவருக்குப் பெயர் ஏற்பட்டது.

வியாக்கிரபாதருடன், பதஞ்சலி முனிவர் சென்று சேர்ந்து காத்திருந்த இடம்தான். வியாக்கிர பாதபுரம் எனவும், பொன்னம்பலம், சிற்றம்பலம், பெரிய கோயில், தில்லை எனவும் அழைக்கப்படும் சிதம்பரத் திருத்தலமாகும்.

அன்னை சிவகாமி பார்த்திருக்க அருகே கோவிந்தராஜப் பெருமாள் சயனித்து, ஆனந்தத் தாண்டவத்தில் திளைத்திருக்க, வியாக்கிரபாதர், பதஞ்சலி முனிவர்கள் தொழுதவண்ணம் நடனத்தைக் காணக் காத்திருக்க பிரபஞ்ச இயக்கத்தை வெளிப்படுத்தும் நடராஜனின் நாதாந்த நடனமும் தில்லையில் நிகழ்ந்தது.... நிகழ்ந்து கொண்டுமிருக்கிறது!

எம்மானின் இந்த ஆனந்த நடனம், பிரபஞ்ச இயக்கத்தை விளக்கிடும் தத்துவ நடனம், யுகயுகமாய் பற்பல காரணங்களுக்காக, பலருக்காக ஆடத் துவங்கியது ஆகாசவெளியில் ஆனந்தத் தாண்டவம் ஆடிடும் அந்தத்திருத்தலம் தான் 'சிதம்பரம்' ஆகும்.

நடராஜர் கைலாசத்திலிருந்து பூலோகத்திற்கு வருவதற்கு முன், தில்லை வனம் காளியின் ஆதிக்கத்தில் இருந்ததாகவும், ஈசன் இங்கு வந்தவ்டன் அவருடைய ஆனந்தத்தாண்டவத்தை முழுமையாக தான் காண வேண்டும் என்ற ஆசையினால், ஈசனை தன்னுடன் நடனப்போட்டிக்கு அழைத்து, அவருடன் பலவித நடனங்கள் ஆட, ஈசன் தன் காதுகளிலுள்ள குண்டலங்களைக் கீழே கழற்றிப்போட்டு, அதைத்தன் காலினாலேயே எடுத்து, காதில் அணிந்து கொண்டு, ஒரு காலை மேலே தூக்கி 'ஊர்த்துவதாண்டவம்' ஆட தன் ஆசை நிறைவேறியதில், இருவரும் முதலில் மேற்கொண்ட நிபந்தனையின்படி, 'பெண் ஆணைப் போல் ஒரு காலை மேலே தூக்கி ஆடக்கூடாது' என்ற ஒரே காரணத்திற்காக தானே தோற்றதாக ஒப்புக்கொண்டாள். நிபந்தனையின் படி தோற்றவர் தில்லையில் வடக்கு எல்லையில் இருந்தருள வேண்டும் என்ற காரணத்தால், வடபத்ரகாளியாக தில்லையில் குடிகொண்டு, 'தில்லைக் காளியாக மேற்கு நோக்கி அமர்ந்தருளினாள்.

எம்மானின் இந்த ஆனந்த நடனம், பிரபஞ்ச இயக்கத்தை விளக்கிடும் தத்துவ நடனம் ஆகும்.

சிவகலைகள் ஆயிரமும் ஒடுங்கியிருக்கும் மூலஸ்தானம் இந்த தலத்தில்தான். இதிலிருந்து ஒரேயொரு கலை மட்டும் தில்லையிலிருந்து புறப்பட்டு உலகிலுள்ள அனைத்து சிவத்தலங்களுக்கும் சென்று விட்டு, பின் இரவு மீண்டும் தில்லைக்கே வந்து இங்குள்ள மூலட்டானச் சிவலிங்கத்தில் ஒடுங்குகிறதாம்.

சுயம்புலிங்கமாய் அருளாட்சி புரியும் இறைவனின் பெயர் இதனாலேயே 'மூலட்டான நாதர்' என்பதாகும்.

உலகை உடலாகக் கொண்ட விராட புருஷனின் மூலாதாரம் திருவாரூர். கொப்பூழ் திருவானைக்காவல். மணிப்பூரகம் - திருவண்ணாமலை. கண்டம் - திருக்காளத்தி. புருவமதியம் - காசி; இதயம் - சிதம்பரம்.


உடலின் இயக்கத்தை வெளிப்படுத்தும் இதயத்தானத்தை பெற்றுள்ள இவ் 'ஆகாயத்' தலம், 'பிரபஞ்ச' இயக்கத்தை வெளிப்படுத்தும் சிவபெருமானின் நாதாந்த நடனத்தைப் பெற்றிடும் அருட்தலமாக விளங்குவதில் வியப்பேதுமில்லை.

சிற்சபை, கனக சபை ஒன்றாக இணைந்திருக்கும் இந்த புண்ணிய தலத்திற்கு ஞான சபை என்ற திருநாமமும் உள்ளது.

தத்துவங்கள் பல அடங்கிய 'பொன்னம்பலம் அமைப்பில் ஒன்பது கலசங்கள் தங்கத்தால் ஆனவை. அவை நவசக்திகளையும், மனித உடலின் ஒன்பது துவாரங் களையும் குறிக்கின்றன.

மனிதன் ஒவ்வொரு நாளும் விடும் சுவாசத்தின் மொத்த எண்ணிக்கையான 21600; தங்கத்தால் ஆன வேயப்பட்டிருக்கும் ஓடுகளாக அமைந்துள்ளன. ஒவ்வொரு ஓட்டிலும் பஞ்சாட்சர எழுத்துக்கள் காணப்படுகின்றன. சுவாச சஞ்சார ஆதாரமான நாடிகள் 72000, ஆணிகளாகப் பொருத்தப்பட்டுள்ளன.

கனக சபையின் பதினெட்டுத் தூண்கள், பதினெட்டுப் புராணங்கள், ஐந்து வெள்ளிப்படிகள் ஐம்பொறிகள்.



பிரம்ம பீடத்திலுள்ள பத்து தூண்களில் ஆறு தூண்கள் ஆறு சாத்திரங்களாகவும், நான்கு தூண்கள் நான்கு வேதங்களாகவும் அமைந்திருக்கின்றன.

பிரணவ பீடத்தில் அமைந்திருக்கும் முக்கிய மான விஷயம் அதுதான் சிதம்பர ரகசியம்; அதுவோர் ஆகாய ரகசியம்!

அருவாய் பரவெளியெங்கும் பரவிக்கிடக் கும் அந்த உயிர் நாடிகளின் பஞ்ச பூத உருவமான ஆகாயம் தான் இந்த ரகசியம்.

அகக்கண்ணால் மனத்தில் ஓர் உருவத்தை வடிக்காமல் பிரபஞ்சமெங்கும் பரவியிருக்கும் ஆகா யத்தில் இறைவனைக்கண்டுணர வேண்டும் என்ற தத்துவத்தை விளக்கும் ரகசியம். திரை விலக்கப் பட்டு, இறைவன் ஆகாய வெளியாய் ஆகாயமெங் கும், அருவாய் வில்வதளமாலையாக உணர்த்தப் படும்போது, மனம், வாக்கு, காயம் என்று ரூபமாக நடராஜரும், அரூபமாக ரகசிய இடமும், உருவம் இருந்தும் இல்லாத (ரூபாரூபமாக) 'ரத்ன சபாபதி' எனும் ரத்தினத்தால் ஆன சிறிய நடராஜரும் தரிசனம் தந்தருளுகின்றனர்.

இந்த 'ரத்னசபாபதி' தினமும் பகல் 10-45 மணிக்கு ஆராதனை செய்யப்படும்போது, தீபாரா தனை செய்யும்போது, முன்புறம் ஆரத்தி காட்டினால் பின்புறம் நடராஜ உருவமும், பின்புறம் ஆரத்தி காட்டி னால் முன்புறம் வெளிச்சமாகவும் தெரியக்கூடியது. வேறு எங்கும் இது போன்ற மூர்த்தியைக் காண முடியாது என்ற அதிசயமும் இந்த ரத்ன சபாபதிக்கு என்று கூறுகிறார்கள்.

பஞ்சபூதங்களாம் நீர், நெருப்பு, நிலம், காற்று, ஆகாயம் என்று ஐந்துமாகி, இதயத்தானத்தில் பிர பஞ்ச இயக்கத்தில் ஆடிடும் திருக்காட்சியினைக் காணலாம்.

ஆக்கல் - காத்தல் - படைத்தல் என்ற முத் தொழில்களையும் எம் ஐயனே, ஆக்கல் - அளித்தல் - அழித்தல் - அடக்கம் - அருளல் என்று ஐந்தொழி லாக ஆடியபடி அருளுகின்றான்.

சிதம்பர ரகசியத்தைப் பார்க்கும் வெள்ளி ஜன்னலில் உள்ள துவாரங்கள் 96. இவை 96 தத்து வங்களையும் ஐந்து வெள்ளிப்படிகளைக்கடந்து நாம் செல்வது. நமது ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றுக்குள்ள, பந்தங்களைக் கடந்து சென்று இறைவனை அடைவதாகவும் இந்த அமைப்பு உள்ளது.

★★★

# பெண்பால் திருமால் அடியார்கள்

## - திருமதி இராஜலட்சுமி கோபாலகிருஷ்ணன் அவர்கள்

ஓங்கி உலகளந்த உத்தமனாகிய திருமால் நெறியினை இவ்வுலகில் பரப்ப, அறியாமையாகிய இருளைப் போக்கி மெய்யறிவாகிய ஞானத்தை மக்களிடையே தோற்றுவித்து, அனைவரும் திருமால் திருவடியைச் சென்றடைய தொண்டு புரிந்தவர்கள் எண்ணற்றவர்.

அவர்களுள் பெரிய பிராட்டியார் முதலாக கொங்குப் பிராட்டி வரையிலான பெண்பால் திருமாலடியார்கள் ஆற்றிய பகவத் பாகவதத் தொண்டுகளை இன்று சிந்தித்து மகிழ்வோம்.

### 1. பெரிய பிராட்டியார்

திருவுக்கும் திருவாகிய திருமாலின் பிராட்டியும் ஸ்ரீ மகாலட்சுமியுமாகிய பெரிய பிராட்டியார் திருப்பாற் கடலை கடைந்தபோது அவதரித்தார்.

பங்கயப் பூவில் பிறந்த பாவை நல்லாள் வாழியே!
பங்குனியில் உத்தரநாள் பார் உதித்தாள்
வாழியே!!

எம்பெருமான் திருவவதாரம் செய்தபோதெல்லாம் அவருடைய செயல்களுக்கெல்லாம் துணை புரிந்தார். நாம் செய்யும் பாபங்களுக்காக நம்மை எம்பெருமான் தண்டித்து விடுவானோ என்று பயந்து; நமது பாபங்கள் மலையளவாயினும் அவற்றைக் கடுகளவாகக் குறைத்துக் காட்டியும்; நாம் செய்யும் பகவத் - பாகவதத் தொண்டுகள் கடுகளவாயினும் அவற்றை மலையளவாகப் பெருக்கிக் காட்டியும், நமக்குப் பரிந்துரை செய்து, எம் பெருமான் திருவருளைப் பெற்றுத் தருபவர். அதுமட்டுமன்றி நமது ஆத்மத்தாயாகவும் ஆசிரியராகவும் விளங்குகின்றார். இத்தகைய நமது ஆத்மத்தாயை ''அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கையுறை மார்பனாக'' விளங்குகின்றார் ஸ்ரீமந் நாராயணன்.

மற்றும் அன்று ஈன்ற கன்றின் மேல் உள்ள அழுக்கையெல்லாம் தன் நாக்கினால் நக்கி, அக்கன்றை தூய்மைப்படுத்துவதோடு அல்லாமல், சூட்டினையும் அதன் உடலில் ஏற்றிக் காக்கும் பசுவைப் போல நமது பாபங்களையெல்லாம் தான் ஏற்றுக் கொண்டு அருள் புரியும் பேரருள் உடையவர் நம்பெரிய பிராட்டியார்.

### 2. ஆண்டாள்


ஸ்ரீமந் நாராயணன் மீன், ஆமை, பன்றி, நரசிம்மம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கிருஷ்ணன் ஆகிய அவதாரங்களையெல்லாம் எடுத்து, இவ்வுலகில் படாதனபட்டு, காடுமேடு எல்லாம் திரிந்தும் இம் மண்ணுலக மக்களைத் திருத்தி பரமபதத்திற்கு அழைத்துச் செல்ல முயன்றான். ஆனாலும் பலன் குறைவாக இருக்கக் கண்டு மனம் வருந்தினான்.

இதையறிந்து பூமிப் பிராட்டியார் வருந்தி தான் மண்ணுலகில் அவதரித்துப் பெருமளவில் மக்களைத் திருத்திப் பரமபதம் அழைத்துவர முயலுகின்றேன் என்று வேண்டி, ஸ்ரீ வில்லிபுத்தூரிலே பெரியாழ்வாரின் திருத்துழாய்த் தோட்டத்திலே சிறு குழந்தையாக ஆடி மாதம் பூரம் நன்னாளில் அவதரித்தார்.

இக்குழந்தையைக் கண்டு பெரியாழ்வார் எடுத்து வளர்த்து வந்தார். திருமாலின் பெருமைகளையெல்லாம் பரக்க உபதேசித்தார். முளைக்கும்போதே நறுமணத்துடன் விளங்கும் திருத்துழாய் போல இளமை முதலே ஞானமுடன் விளங்கினாள். எனவேதான்

''பிஞ்சாய் பழுத்தாளை ஆண்டாளை தினமும் நெஞ்சால் வணங்க வேண்டும்'' என்று கூறப்படுகிறது. இதனையே தான் ''பிஞ்சாய் பழுத்தேனோ ஆண்டாளைப் போல'' என்றார் திருக்கோளூர் பெண்பிள்ளை.

எம்பெருமானை நோன்பு நோற்று அடையலாம் என்று நோன்பு நோற்றாள். வேதமனைத்திற்கும் வித்தான திருப்பாவையையும், எம்பெருமானை அடையாமையால் ஏற்பட்ட காதல் தாபங்களை வெளியிடும் நாச்சியார் திருமொழியையும் நமக்கு அருளினாள். ''மானிடவர்க்கென்று வாழ்க்கைப்படின் வாழ கில்லேன்'' என்று உறுதி பூண்டு, இன் அமுதர்,



குழலழகர், வாயழகர், கண்ணழகர், கொப்பூழ் அழகர் ஆகிய அழகிய மணவாளனாகிய செங்கோல் பிடித்த திருவரங்கனையே மணாளனாக அடைய எண்ணி, அவன் திருவருளால் அவன் திருமேனியுடன் இரண்டறக் கலந்தார். கோதை, சூடிக் கொடுத்த சுடர்கொடி ஆண்டாள் என்னும் பல சிறப்புப் பெயர்களைப் பெற்றாள். வேதமனைத்துக்கும் வித்தான திருப்பாவையை நாம் தினமும் பாடி மகிழ்வோமாக!

### 3. எம்பெருமானை மகனாகப் பெற்ற பெரும் தாயர்

#### i) கௌசலை

''தெய்வத்தைப் பெற்றேனோ கௌசலையைப் போல'' என்ற திருக்கோளூர் பெண்பிள்ளையின் வாக்கிற்கொப்ப, தயரதன் கௌசலை தன் குல மதலையாய், மன்னு புகழ் கௌசலை தன் மணி வயிற்றில் திருவுடைய கருவாய் இருந்து இராமனாய் திருவவதாரம் செய்தான். கோடி சூர்யப்பிரகாசனான திருமால் நிலைபெற்ற புகழுடைய கௌசலையின் திருவயிற்றில் தோன்றக்கூடிய பெரும் பாக்கியத்தைப் பெற்றார். கௌசலை, இத்தகைய சிறப்புடைய இராமனைப் பெற்றதால் தயரதனும் பெருமகிழ்ச்சி கொண்டான்.

எனவேதான் ''நின்னையே மகனாகப் பெறப் பெறுவேன் ஏழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே'' என்று புலம்பினார் தயரதர்.

#### ii) ரோகிணி

ஸ்ரீமந் நாராயணன் ஆதிசேடன் அம்சமாக வசுதேவரின் இரண்டாம் மனைவியான தேவகியின் கருவில் முதலில் தோன்றி, உடன் வசுதேவரின் மூத்த மனைவியான ரோகிணியின் வயிற்றில் வளர்ந்து பலராமனாக அவதரித்தார். அடுத்து அவதரித்த ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு உறுதுணை புரிய, அவருக்கு மூத்தவரான பலராமனைப் பெற்றெடுக்கும் பெரும் பேற்றினைப் பெற்றாள் ரோகிணி. அதுமட்டுமின்றி பலராமனையும், கிருஷ்ணனையும் ஒருங்கே வளர்த்த பெருமையும் பெற்றாள். இவ்வாறு பகவத் தொண்டாற்றினார் ரோகிணித் தாய்.

### iii) தேவகி

முற்பிறப்பில் கச்யபர் - அதிதி தம்பதிகளாக வாழ்ந்து எம்பெருமானைப் பிள்ளையாகப் பெற வேண்டுமென்று வரம் பெற்று மறுபிறப்பில் வசுதேவர் - தேவகியாகப் பிறந்து கிருஷ்ணனை மகனாகப் பெற்றனர். பேணி வளர்க்கும் பேற்றினைப் பெறாத பேரிழப்பைப் பெற்றுப் பெரிதும் வாடினார் என்றாலும் பெற்றுத்தந்து, பெரும்புகழ் கேட்டுப் பேரின்பமடைந் தார். இப்படி பகவானை நமக்குத்தந்து பகவத் பாகவதத் தொண்டாற்றினார்.

### iv) யசோதை

''ஆயனை வளர்தேனோ யசோதையைப் போல'' என்ற வாக்கிற்கிணங்க யசோதை - நந்த கோபர் கண்ணனைப் பெற்றெடுக்கவில்லையென்றாலும், பேணி வளர்த்து, அவன் திருவிளையாடல்களை எல்லாம் கண்டு களித்து பெருமையுற்றனர். உலகையே காத்து அருளும் கிருஷ்ணனையே பேணி வளர்த்த பெருமை பெற்றவர் யசோதை. யசோதை பெற்ற பேற்றினைத்தான் பெறவில்லையே என்று தேவகித் தாய் பெரிதும் வருந்தியதில் இருந்து யசோதை பெற்ற பெரும் பேற்றின் பெருமையை நாம் உணரலாம். அதுமட்டுமின்றி, அவதார நோக்கமான துஷ்டர்களை அழித்து நல்லோரைக் காத்து, தர்மத்தை நிலைநாட்டிய கண்ணனைப் பேணிக்காத்து உருவாக்கிய பகவத் தொண்டினை ஆற்றிய பெருமை தேவகியைச் சாரும் என்பது ''உள்ளங்கை நெல்லிக்கனி'', தேவகிச் சிங்கமே என்று கூட பெருமாள் பெயர் பெற்றார்.

### v) அதிதி

கசியபர் - அதிதி ஆகியோர் செய்த தவப் பயனால் ஓங்கி உலகளந்த உத்தமனாகிய எம்பெருமான் அதிதியின் வயிற்றில் மகனாக அவதரித்தார். இந்திரன் பதவி பறிபோகாமல் இருக்க, அவன் திருமாலை வேண்ட இவ்வவதாரம் எடுத்து மாபலியிடம் மூவடி மண் வேண்டி. மண்ணுலகையும் விண்ணுலகையும் அளந்த பெருமையுடைய திருமாலையே தன்மகனாகப் பெற்ற பெருமையுடையவர் அதிதி. இவரது தவப்பயனால் திருமாலின் திருவடி இம்மண்ணுலகம் முழுவதும் படும்படியான பேற்றினைப் பெற்றோம். பெருமாள் பாததூளி படுதலால் பாக்கியம் செய்தது இப்பூமி. இப்படி அதிதித் தாய் பகவத் பாகவதத் தொண்டாற்றினார்.

## 4. திருமாலுக்குத் தொண்டாற்றிய தெய்வ நங்கையர்

### i) சபரி

''இனியது ஒன்று வைத்தேனோ சபரியைப் போல'' என்ற திருக்கோளூர் பெண்பிள்ளை வாக்கிற்கிணங்க ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகனுக்கு இனிய பழங்களைக் கொடுத்து, உபசரித்த பெருமை பெற்றவர்சபரி. சீதையைத் தேடி, காடு மேடெல்லாம் திரிந்து, உடலும் உள்ளமும் சோர்ந்து வந்து கொண்டிருந்த இராம - இலக்குமணரை, தமது ஆச்சாரியர் கட்டளைப்படி வரவேற்று, வழிபட்டு, உபசரித்து, பரமபதம் அடைந்தவர். இவரது உபசரிப்பை ஏற்று, ''சபரி தந்த கனி உவந்து'' என்ற ஆழ்வார் வாக்கிற்கிணங்க இராமபிரான் அமுது செய்தருளினான். இவ்வாறு எம்பெருமானுக்கு பகவத் தொண்டாற்றி, நமக்கெல்லாம் எடுத்துக் காட் டாய் விளங்கினார் சபரித்தாய்.

### ii) கூனி

இவர் இராமாயணத்தில் வரும் கூனியல்ல. பாகவதத்திலே சொல்லப்படுகின்ற கூனி ஆவர். கம்சனாகிய கொடியவனுக்கு நறுமணப் பொருள்களை வழங்கி வந்தாள் எனினும் கண்ணன் பால் பெரும் பக்தி கொண்டவள், கண்ணன் வடமதுரை வீதியிலே இவளைக்கண்டு, கம்சனுக்கு எடுத்துச் செல்லும் நறுமணப் பூச்சுகளைக் கேட்க, அவளும் மனமுவந்து கொடுக்க, அணிந்தான். அவளது பக்திக்கு மகிழ்ந்து அவளது கூனை நீக்கி அருளினான் கண்ணன். இவ்வாறு கண்ணனுக்கு நறுமணச் சாந்து கொடுத்து பகவத் தொண்டாற்றி, அவனது திருக்கரங்களால் தன் கூனும் நீங்கப் பெற்றவள். இதனையே திருக்கோளூர் பெண் பிள்ளை அவர்கள்.

''பூசச்சாந்து கொடுத்தேனோ கூனியைப் போலே'' என்று கூறி பகவத் தொண்டாற்றாமைக்கு வருந்துகிறார். இதனால் நாம் அனைவரும் பகவத்

---

**திருவேங்கடத்தில் ஒரு மீனாக ஆசை**

ஆனாத செல்வத்து
அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும்
மண் அரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ்சோலை
திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும்
விதி உடையேன் ஆவேனே.

- குலசேகராழ்வார்

---

தொண்டாற்ற வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். இதனையே பெரியாழ்வாரும்

''மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து''

என்கின்றார்.

கீழ்காணும் திருக்கோளூர் பெண் பிள்ளையின் வாக்கும் நோக்கத் தக்கதாகும்.

''இருகையும் விட்டடேனோ திரௌபதியைப் போல''

## 5. திரௌபதி

எம்பெருமான் நமது கட்புலனுக்கு எட்டாதவன் ஆயினும் அவனது திருநாமம் நமக்கு உடன் நின்று உதவும்.

''அவன் தூரத்தன் ஆனாலும், அதுகிட்டி நின்று உதவும்''

(முமுட்சுப் படி)

திரௌபதியை தருமன் சூதாட்டத்தில் தோற்றதால் கொடியவன் துரியோதனன் அவளை மான பங்கப்படுத்த, அவள் ஆடையை அவிழ்க்க துர்ச்சாதனனுக்கு ஆணையிட்டான். அவனும் ஆடையை அவிழ்த்தான். அந்த சபையில் சான்றோர்களாகிய பீஷ்மர், துரோணர், விதுரர், கிருபர்ஆகியோரும், வீரர்களும், அவளது கணவன்மார்களுமாகிய பஞ்சவர்களும் இருந்து அவளது மானத்தைக் காக்க முடியாமல் அனைவரும் செயலற்று நின்றனர். எனவே அவள் அனாதையானாள். 'திக்கற்றவர்க்கு தெய்வமே துணை'', ''நம்பினோர் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு'' என்பதற்கிணங்க, திரௌபதை தன் இருகைகளையும் மேலே தூக்கி, ''கோவிந்தா துவாரக வாசா! சரணம்'' என்ற கூப்பிட்டவுடனே கண்ணபிரான் ஆடை சுரந்து மானத்தைக் காத்தான் . இங்குக் கீழ்காணும் பொன்மொழிகள் நோக்கத்தக்கன.

''துரௌபதிக்கு ஆடை சுரந்தது கோவிந்த நாம மன்றே'' (முமுட்சுப்படி)
''கொடுமை கண்டமுத துரௌபதைக்கு துகில் கொடுத்து ரக்ஷித்தாயே'' (தனிப்பாடல்)

இவ்வாறு கண்ணபிரானை சரணமடைந்த திரௌபதியின் மானம் காக்கப்பட்டது கொண்டு நாமும் துவய மந்திரத்திற்கிணங்க எம்பெருமானை சரணமடைந்து அவன் திருவடிசேர்வோமாக. இங்கு

## 6. கொங்குப் பிராட்டியின் குருபக்தி

பகவத் இராமானுஜர் திருவரங்கத்தில் இருந்தபோது கொங்கு நாட்டிலிருந்து தன் கணவருடன் ஒரு பெண்மணி திருவரங்கத்தில் தங்கி, இராமாநுஜரை குருவாக ஏற்று வழிபட்டு வந்தார். எம்பெருமான் அருளிய நல்வார்த்தைகளின் மகிமையை இராமாநுஜரிடமிருந்து அறிந்தார். அவர் தம் ஊர் திரும்பும்போது உடையவரின் திருவடிகளைப் பெற்று வந்து வணங்கி வந்தாள்.

இராமாநுஜன் சோழ மன்னனின் கொடுமையால் கர்நாடகம் செல்லும்போது கொங்குப் பிராட்டியின் ஊரில் தங்க நேர்ந்தது. வந்தது இராமாநுசர் என்று அறிந்தும் அவரது வெள்ளை ஆடையில் சந்தேகமுற்றாள். எனவே அவரது பாதுகையைக் கொண்டு அணியச் செய்து சந்தேகம் தீர்ந்தாள். பின் வணங்கி, உபசரித்து மகிழ்ந்தாள். இதனையே திருக்கோளூர் பெண்பிள்ளை

''அடி (திருவடி) வாங்கினேனோ கொங்குப் பிராட்டியைப் போலே'' என்றார்.

எம்பெருமானும், பிராட்டியும் கைவிட்டாலும் அவரது திருவடி நம்மை கைவிடாமல் காக்கும்.

(திருமால்) அவன் விடினும், அவள் (திருமகள்) விடினும், அது (அவன் திருவடி) விடாது.

எனவே நாமும் எம்பெருமானது திருவடிகளை வணங்கி, அவனது அருளைப் பெறுவோமாக!

இதுகாறும் கூறியவற்றால் எவ்வாறு பெரிய பிராட்டியார் உட்பட கொங்குப் பிராட்டி வரையிலான திருமாலடியார்கள் ஆற்றிய பகவத் பாகவதத் தொண்டுகளை நாமும் ஆற்றி ஸ்ரீமந் நாராயணன் திருவடி சேர்வோமாக! எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்!

★★★

### வீடு பேறு எளிது

அற்றது பற்றெனில்
உற்றது வீடு
- நம்மாழ்வார்

# திருமாலின் திருவருள்

- பி. பத்ரிநாத் ராமானுஜ தாசர்

எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் தேவ, மனித, விலங்கு, பறவை போன்ற அனைத்து உயிர் களிடத்தும் சாதி, மதம், உயர்வு, தாழ்வு போன்ற எந்த வேறுபாடுகளும் இன்றியே தமது அருளைப் பொழிந் துள்ளார் என்பதை ஒருசில எடுத்துக்காட்டுகளுடன் அடியேன் எடுத்தியம்ப விழைகின்றேன்.

திருமால் தாம் எடுத்த அவதாரங்களிலும் இதனை மெய்ப்பித்துள்ளார். மீனாகவும், ஆமை யாகவும், பன்றியாகவும், நரசிம்மமாகவும், வாமன னாகவும், பரசுராமனாகவும், இராமனாகவும், பலராம னாகவும் கண்ணனாகவும் எந்த வித வேறுபாடு மின்றி அனைத்து உயிர்வகைகளிலும் அவதாரம் செய் துள்ளார்.

மானிடப்பிறவியில் ஆழ்வார்களில் பொய்கை யார், பூதத்தார், பேயாழ்வார், ஆண்டாள் ஆகியோர் கருவில் வளராமலே தாங்களே தோன்றினர். திரு மழிசை யாழ்வாரோ சதைப் பிண்டமாக பிறந்து இறைவன் திருவருளால் குழந்தையாக மாறினார். அடுத்து அந்தணர் குலத்தில் பெரியாழ்வாரும், மது ரகவிகளும், தொண்டரடிப் பொடியாழ்வாரும்; அரசர் மரபிலே குலசேகரரும்; வேளாளர் குலத்தில் நம்மாழ்வாரும்; கள்ளர்மரபில் திருமங்கை மன்ன னும்; பாணர் குலத்திலே திருப்பாணாழ்வாரும் தோன்றினார்கள். இப்படி ஆழ்வார்கள் தோற்றத்தி லும் சாதி, மத வேறுபாட்டினைக் காண இயல வில்லை. இதனால் நல்லோர்கள் எந்தக் குடியிலும் பிறப்பர் என்பதும், எம்பெருமான் அனைத்து குடி யினரிடத்தும் ஒரே வகையான நோக்கம் உடையவர் என்பதும் தெளிவாகின்றது.

திருமால் ஊர்வன, பறவை, விலங்கு, அரக் கன், தீயவர், சிறுவர், வேடர், திருக்குலத்தார், பாணர், கள்ளர், வைசியர், வேளாளர், அரசர் அந்தணர் என்னும் பல நிலையிலுள்ள அனைத்து அடியார்களுக்கும் எந்த வித வேறுபாடுமின்றி அருள்புரிந்த வரலாற் றைக் காண்போம்.

### 1. காளிங்கன்

யமுனை ஆற்றில் ஒருபகுதியில் வாழ்ந்த மீன்களையெல்லாம் கருடன் சாப்பிட்டு மீன்களை அழித்து வந்தான். மச்சங்களின் தலைவன், சௌபரி முனிவரிடம் முறையிட்டான். சௌபரி முனிவர் கருட னிடம் இம்மடுவில் உள்ள மீன்களைத் தின்ன வேண்டாமெனச் சொல்லியும் கருடன் மீன்களைச் சாப்பிட்டு வந்தான். இதைக்கண்ட முனிவர் இனி இம்மடுவின் பக்கம் நீ வந்தால் மாண்டு போவாய் என்று சாபமிட்டார். அன்று முதல் கருடன் அப்பக்கம் செல்வதே இல்லை. இதையறிந்த காளிங்கன் கருட னுக்கு பயந்து அங்கு சென்று வசித்து வந்தது. காளிங்கன் விஷத்தால் அங்கு நீர் அருந்தும் அனைத்து உயிரினங்களும் அழிந்து வந்தன.

இதையறிந்த கண்ணன் அம்மடுவில் குதித்து காளிங்கனுடன் கடும்போர் புரிந்து, அவன் ஐந்து தலைகளின் மேல் ஏறி, நடனமாடி அதன் கர்வத்தை அடக்கிக் கொல்லமுயன்றபோது, காளிங்கன் இரு மனைவிகளும் கண்ணனிடம் சரணமடைந்து, மாங் கல்யப் பிச்சை கேட்டனர். கண்ணனும் மன மிரங்கி காளிங்கனைக் கொல்லாமல் விடுத்து, இனி யமுனையை விட்டு சமுத்திரத்தில் சென்று வாழும்படி கட்டளையிட்டார்.

இப்படித் தீமைகளைச் செய்து வந்த காளிங் கன் கண்ணனைச் சரணமடைந்ததும், அவன் ''ஊர் வன சாதியாயிருந்தும்'' அவனைக் காத்தருளினார்.

### 2) ஜடாயு

ஜடாயு என்ற பறவை அரசன் தசரதரின் நண் பன். இராமபிரான் காட்டில் சென்று வாழ்ந்தபோது, பொன்மானாக வந்த மாரீசனைக் கொல்ல துரத்திச் சென்றான். அப்போது சீதையை எடுத்துச் சென்ற இராவணனுடன் போர் புரிந்து ஜடாயு தன் இறக்கை களை இழந்து கீழே விழுந்தது. இராமபிரானிடம் இச்செய்தியைச் சொல்லிவிட்டே இறக்கவேண்டு மென்று இராம நாமத்தைச் சொல்லிக் கொண்டே யிருந்தது. சீதையைத் தேடிக் கொண்டு வந்த இராம இலக்குமணர் இக்குரல் கேட்டு, ஜடாயுவைக் கண்டு, செய்தியறிந்து வருந்தினர். செய்தியைச் சொன்ன வுடன் ஜடாயுவின் உயிர் பிரிந்தது. இந்த பறவையரச னுக்கு மோட்சமளித்ததோடன்றி, ஈமக்கிரியைகளை யும் செய்தான். இவ்வாறு ''பறவை யென்றும்'' பாரா மல் திருமால் செய்த காருண்யம் போற்றத்தக்கதாகும்.

## படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே

செடியாய வல்லினைகள்
தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா
நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும்
அரம்பையரும் கிடந்து இயல்கும்
படியாய்க் கிடந்துன் பவள
வாய் காண்பேனே.

### 3) கஜேந்திரன்

இந்த யானை முற்பிறப்பில் ''இந்த்ரத்யும் நன்'' என்ற பெயர் பெற்றவன். திருமாலை நோக்கித் தவம் செய்து வந்தான். அகத்திய முனிவர்தவம் செய்த இடத்திற்குச் சென்றார். தவத்தில் ஆழ்ந்திருந்த இவ் வரசன் முனிவரது வருகையை உணராமல் வர வேற்காமல் இருந்தான். இதைக் கண்டு கோபித்த அகத்தியர் ''யானையைப் போல் செருக்குற்று இருக் கும் நீ யானையாகப் பிறக்கக் கடவாய்'' என்று சபித்தார். இந்த சாபத்தினால் மறுபிறவியில் யானை யாகப் பிறந்த கஜேந்திரன் தினமும் மடுவில் குளித்து தாமரை மலரைக் கொண்டு திருமாலை வழிபட்டு வந்தது. அதேமடுவில் ஒரு முதலை வசித்து வந்தது.

தேவமுனிவர் ஒருவர் நீரில் நின்று தவம் செய்து வந்தார். அப்போது ''ஹூ ஹூ'' என்ற கந்தர்வன் அவர் காலைப் பிடித்து இழுத்து தவத்தைக் கலைத்தான். எனவே ஒரு முதலையாகப் பிறக்கக் கடவாய் என்று சபித்தார். அந்த கந்தர்வன் தான் இந்த முதலை.

ஒருநாள் கஜேந்திரன் தாமரை மலரைப் பறித் துக் கொண்டு கரையேறும் போது இம்முதலை யானை யின் காலைப்பிடித்துக் கொண்டது. முதலையிடம் இருந்து தப்பிக்க இயலாமையால் தன் துதிக்கையை மேலே தூக்கி ''ஆதிமூலமே'' என்று கதறியது. இதைக் கேட்ட ஸ்ரீமந் நாராயணன் ஓடோடி வந்து, முதலை யைக் கொன்று, யானையைக் காத்து, அது தன் திரு வடியில் சேர்க்க வைத்திருந்த தாமரை மலரைப் பெற்று, அதற்கு மோட்ப் பதவியளித்து அருளினான். இவ்வாறு ''மிருகசாதி என்றும் பாராமல்'' அருளிய கருணையே கருணை.

### 4. பார்த்தன் தேர்க்குதிரைகள்

பாரதப் போரில் பரந்தாமன் பார்த்தனுக்குத் தேரோட்டியாக அமர்ந்து தேரோட்டினான். அப்போது குதிரைகள் நீர் வேட்கையால் களைப்புற்றன. அவைகள் மீது கருணை கொண்டு, ஓர் அம்பினால் பூமியைத் துளைத்து, நீரை வரவழைத்து ''குதிரை களின்'' தாகத்தைத் தீர்த்த கண்ணபிரான் கருணையை என்னென்பது.

### 5. சுக்ரீவன்

சீதையைத் தேடிச் சென்ற இராமபிரான் ருஷிய முக மலையில் அனுமனையும் சுக்ரீவனையும் காணு கின்றார். அனுமனைத்தன் சேடனாகவும் பக்தனாகவும் ஏற்று ''சிறிய திருவடி'' என்று பாராட்டக் கூடிய பேற்றினை அளித்தான். சுக்ரீவனைத் தனது உடன் பிறந்தவனாக ஏற்று, நட்பு கொண்டு ''உன்னொடும் அறுவரானோம்'' என்று கூறி ''குரங்கினத்திற்கு''ப் பெருமை அளித்தார்.

### 6. வீபீடணன்

இலங்கையரசனான அரக்கன் இராவண னுடைய தம்பியே விபீடணன். அண்ணன் அடாத செயலைத் தடுத்து நிறுத்த முடியாத நிலையில் இராமனிடம் சரணாகதி பண்ணினான். இவனுடைய உண்மையான பக்தியை அறிந்த இராமபிரான் சரணா கதியை ஏற்று அடைக்கலம் தந்து இலங்கைக்கு மன்னனாக முடிசூட்டி மகிழ்ந்தான். ''அரக்கர் குலத் தவன்'' என்ற வேறுபாடின்றி அருள்புரிந்து காத்தருளிய காகுத்தனின் கருணைக்கு நிகர் ஏது?

### 7. பிரகலாதன்

தீயவனாகிய இரணிய கசிபுவின் மகனாகப் பிறந்த பிரகலாதன் கருவிலே திருவுடையவனாகி ஹரி பக்தியில் சிறந்து விளங்கினான். ஐந்து வயதிலேயே உறுதியான உள்ளத்துடன் திருமால் மீது அசையாத பக்தியும், நம்பிக்கையும் கொண்டு விளங்கினான். பலவிதமான கொடுமைகளை இரணியனாகிய தந்தையே இழைத்த போதும்; சிறுவனானாலும் திருமாலே முழுமுதற் கடவுள் என்பதையும், எத்தகைய துன்பத்தையும் அவன் போக்குவான் என்ற நம்பிக்கையும் கொண்டிருந்தான். அணுவின்துகளிலும் ஹரி இருக்கின்றான் என்று பயப்படாது எடுத்துக்கூறி தூணில் நரசிங்கமாய் வரவழைத்து தந்தையின் கூற் றினை பொய்யாக்கிக் காட்டினான்.

இவ்வாறு ''சிறுவனாகிய பிரகலாதனுக்கும்'' பேரருள் சுரந்த திருமாலின் திருவருளுக்கு இணையேது?

### 8. ததிபாண்டவன்

கோகுலத்தில் ததிபாண்டவன் என்றவன் வாழ்ந்து வந்தான். அவன் ஞானமுடையவன். கண்ணன் திருமாலின் அவதாரம் என்பதை உணர்ந்தவன். கண்ணன் யசோதைக்குப் பயந்து ஓடி ததிபாண்டவனிடம் சென்று தன்னை மறைத்து வைக்கும்படி வேண்டினான். கண்ணன் வேண்டியபடி கண்ணனுக்கு உதவி புரிந்தான் ததி பாண்டவன். அதற்கு மறுபலனாக தனக்கும் தன் தயிர் பானைக்கும் வைகுண்டப் பதவி கேட்டுப் பெற்றான். இவ்வாறு கண்ணன் இருவருக்கும் (பானைக்கும்) வைகுண்டப் பதவி அளித்த அருளுக்கு எதுதான் இணையாகும்?

### 9. குகன்

கங்கைக்கரையில் வாழ்ந்த வேடர்களின் தலைவனான குகன் இராமபிரானிடம் செலுத்திய பக்திக்கு எல்லையே இல்லை. நதிக்கரையில் உறங்கிய இராமபிரானைக் காக்க இலக்குவன் காவல் புரிந்ததும், இலக்குவனைப் போலவே குகன் காவல் காத்ததும், வேடுவர் காவல் புரிந்தும் வேடுவரின் பக்திக்கு ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகும். எனவேதான் இராமபிரான் குகனைத் தன் தம்பியாக ஏற்று ''நின்னொடும் ஐவரானோம்'' என்று கூறினான். வேடர் குலத்தவன் என்றும் பாராமல் குகனைத் தன் தம்பியாக ஏற்ற இராமபிரான் பாசத்திற்கு ஈடு இணை காண முடியாது.

### 10. தூதுவன்

கிருஷ்ணாவதாரத்தில் பஞ்ச பாண்டவர்கள் பின்பற்றிய தரும நெறியையும் அவர்களது தர்ம சிந்தனையையும் மனத்திற் கொண்டு, அவர்களைக் காத்து வெற்றி தேடித் தருவதாக வாக்களித்தான். சாதாரண சந்திர குல மன்னர்களான பாண்டவர்க்காக, தீயவன் துரியனிடம் தூது சென்ற செயல் எண்ணி எண்ணி வியக்கத் தக்கதாகும். இச் செயலைச் சமணத் துறவி இளங்கோவடிகளே போற்றுகின்றார்.

''பஞ்சவர்க்குத் தூது நடந்தானை ஏத்தாத
நா என்ன நாவே''

என்பது சிலப்பதிகாரம்

மற்றும் மாபாரதம், ''தூது நடந்தவன் ஏற்றம்
கூறுகின்றது''

என்றும் பாராட்டப்படுகிறது.

★★★

### 11. திருக்கச்சி நம்பிகள்

வணிகர் குலத்திலே பிறந்து, காஞ்சி பேரருளாளனுக்கு ஆலவட்டம் (விசிறி) வீசும் பகவத் தொண்டு செய்தவர். இவரது தொண்டுக்கு மகிழ்ந்த பேரருளாளன். தினமும் இவருடன் கலந்துரையாடி மகிழ்ந்தார். அது மட்டுமன்றி வைணவ மதாசாரியரான பகவத் இராமாநுஜரின் வேண்டுதலுக் கிணங்கி பேரருளாளனிடமிருந்து ஆறு வார்த்தைகள் பெற்றுத் தந்தார். மற்றும் அவருக்கு உணவளித்து எஞ்சியதைத் தான் உண்டு மகிழ விரும்பினார் இராமாநுஜர். ''வணிக குலத்தில்'' பிறந்தவர் என்று வேறுபாடு காணாமல் திருக்கச்சி நம்பிகளுக்கு இறைவர் பேரருள் புரிந்த பாங்கு புளகாங்கிதம் தருகிறது.

### 12. மாறனேரி நம்பி

ஆளவந்தாரின் ஆத்ம சீடர்களில் திருக்குலத்தார் வம்சத்தில் பிறந்த மாறனேர் நம்பியும் ஒருவராவர். இவர் குருபக்தியில் சிறந்தவர். குருவாகிய ஆளவந்தார் திருமேனியில் தோன்றிய இராஜ பிளவைக் கட்டியை இறைவனிடம் வேண்டித் தான் பெற்றுக் கொண்டு குருவின் துயரைப் போக்கிய தயாளர். இராமாநுஜரின் குருவும் ஆளவந்தாரின் சீடருமான பெரிய நம்பிகள் மாறனேர் நம்பியின் இராஜபிளவைக் கட்டிக்கு மருந்து இட்டு அவருக்கு உணவூட்டினார் என்றால், அவரது பக்தியின் பெருமையைப் பாராட்டாமல் இருக்க இயலுமோ?

மற்றும் மாறனேரி நம்பிக்கு இறுதிச் சடங்குகளைப் பெரிய நம்பிகள் செய்தார். இது இராமபிரான் சடாயுவுக்கு ஈமக்கிரியைகளைச் செய்ததோடு ஒக்கும். இவ்வாறு மாதவன் ''சாதிகுலம்'' பாராது பக்தர்களுக்கு அருள் புரிந்தார்.

இதுகாறும் கண்டவற்றால் திருமால் எந்த வித வேறுபாடும் பாராமல் அனைத்து உயிர்கட்கும் அருள் புரிந்தார் என்பதைக் கண்டோம். எனவே நாமும் அவரைப்பின் பற்றி அனைத்து உயிர்களிடத்தும் அன்புகாட்டி, துயர்நீக்கி, வாழ்ந்து திருமால் திருவடி சேர்வோமாக!

ஆழ்வார், எம்பெருமானார், ஜீயர் திருவடிகளே சரணம்.

# கம்பன் காட்டும் பரதன்

- முனைவர் இரா. செல்வகணபதி

(முன் தொடர்ச்சி)

கோசலை பரதனை

**'முன்னை நும்குல முதலுளோர் கள்தாம்
நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்
மன்னர் மன்னவா என்று வாழ்த்தினாள் -'**

என்று வாழ்த்தியதாகக் கம்பன் நிறைவிக்கிறான் கோசலைக்கு இருந்த ஐயம், இப்போது நீங்கியது மட்டும் அன்று, பதினான்கு ஆண்டுகளுக்குப்பின், பரதனைப் பற்றிய மதிப்பீடு அவள் நெஞ்சில் எவ்வாறு உயர்கிறது என்பதையும் கம்பன் இனங்காட்டத் தவற வில்லை.

நந்தியம் கிராமத்தில், இராமன் பாதுகைகளே துணையாக, தவவாழ்வு வாழ்ந்து வரும் பரதன், குறித்த நாளில் இராமன் நாடு திரும்பாமையால், தீப்புகுந்து உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிகிறான். செய்தி அறிந்த கோசலை, நெஞ்சம் துடிதுடித்துப் பரதனைச் சென்றடைகிறாள். 'பரதா! நீ தீப்புகத்துணிந்தால் இந்த நாடே தீப்பாய்ந்து அழியும். நாற்பெரும்படையும் தீப்புகும்: தாயர்களாகிய நாங்கள் மட்டும் அன்று; சிறப்புமிக்க அறமும் தீயில் மாயும்; உலகில் நிலை தடுமாறும்.'

**தரும நீதியின் தன் பயன் ஆவது உன்
கருமமே அன்றிக் கண்டிலம் கண்களால்
அருமை ஒன்றும் உணர்ந்திலை ஐயநின்
பெருமை ஊழி திரியினும் பேருமோ?**

நீதியின் பயன், பரதனின் செயல்கள் என்று மதிப்பிடும் கோசலை, அவனை ஓர் ஒப்புமை மூலம், பாராட்ட நினைக்கிறாள். தன் வயிற்றில் உதித்த, இராமனை நினைக்கிறாள். பரதனை, அவன் செயல்களை, அன்பு நெஞ்சம் சீர் தூக்கிப் பார்க்கிறது. பண்பில், சகோதர பாசத்தில், பழிதுடைக்கும் பேருணர்வில், பரதன், இராமனை விட உயர்ந்தவன் என்று நல் நெஞ்சம் இனம்காண்கிறது. அவ்வுயர்வின் அளவு எத்தகையது? எவ்வளவினது? நாம் வியக்கக் கோசலை மதிப்பீடு அமைகிறது!

**எண்ணில் கோடி இராமர்கள் என்னிலும்
அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவரோ**

கோடி இராமர் அருளுக்குப் பரதன் நிகரானவன் என்கிறது அன்று ஐயுற்ற கோசலை மனம்.

தசரத குமாரர்கள் பிறந்தகாலை, கம்பன் முனி வன் கூற்றாகக் கதை நடத்துவான். ஒவ்வொருவர் பிறப்பாகக் கூறி வரும் கம்பன் பரதனைக் கைகேயி பெற்றெடுத்ததைக் கூறும்போது, குலமுறை கிளத் துப் படலத்தில்,

**தள்ளரிய பெருநீதித் தனிஆறு புக மண்டும்
பள்ளம் எனும் தகையானை பரதன் எனும்
பெயரானை
எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ் இருந்த
வள்ளலையே அனையானை கேயர்கோன்
மகள் பயந்தாள்**

என்று முனி மொழியாக அறிமுகம் செய்வான். தள் ளரிய பெரு நீதித் தனியாறு புகமண்டும் பள்ளம்' என்ற தொடரின் முழுப்பொருளையும் நிலைநாட்டப் பரதனின் சூளுரைகளைப் பதிவு செய்து, அவன் நீதியின் உறைவிடம் என்பதை நிலைநாட்டுவான். வள்ளலையே அனையான் என்ற அறிமுகத்தை வளர்த்து, அவன் கோடி இராமர்களுக்கு இணை என்று, உயர்த்தி மகிழ்வான். பாரதத்தில் அறப்பாத்திர மாக மூத்தவன் தருமன் அமைந்தான். இராம காதையில் இளையவன் தரும வடிவாகச் சிறப்பதைக் கண்டு மகிழ முடிகிறது.

பழி துடைத்துக் கொள்வது மட்டும் அன்று: உலகத்தார் பாராட்டுக்களையும் பெறுவது, மானுடத் தின் குறிக்கோளாகவும் அமைதல் வேணடும். அப் பாராட்டும், தொடர்பற்ற அன்னியரிடமிருந்து வரும் போது, அதன் மதிப்புப் பன்மடங்காகி விடுகிறது. பரதனுக்கு அத்தகு பாராட்டுக் கிடைக்கும் ஓர் இடம் நினைவு கூர்ந்து மகிழத்தக்கது.

இராமகாதையும், மகாபாரதமும் இந்தியத் திருநாட்டின் தொல் இலக்கியங்கள். சகோதரர்கள் தம்முள் பேதமின்றி அன்பு கொண்டு வாழ்ந்து, வெற்றி யீட்டி வாழ்ந்த கதை இராமன் கதை. அவர்கள், தம் முள் கலாம் விளைத்துப் பகைமை கொண்டு பழி சுமந்து வீழ்ந்த் கதை பாரதக்கதை. ஒன்று, உடன் பாட்டால் சகோதர அன்பின் உயர்வைப் பேசியது. பிறிதொன்று, எதிர்மறையால், பங்காளிச் சண்டை யால் வீழ்ந்தவரை இனங்காட்டிச் சகோதர அன்பின் இன்றியமையாமையை வற்புறுத்தி நின்றது.



கட்டுக்கோப்பான, அன்பு நிறைந்த, அயோத்திச் சகோதரர்களை இனங்காட்டும் கம்பன், தம்முள் பகைத்துக் கொண்டதால் வீழ்ந்த இரு சகோதரர்களையும் நமக்கு இனம் காட்டுகின்றான். ஒருவன், கிஷ்கிந்தையில் வாழ்ந்த வாலி. இன்னொருவன், இலங்கையில் வாழ்ந்த இராவணன்.

வாலி சுக்ரீவன் சண்டையில் சிக்கிக் கொள்கிறான் இராமன். உணர்ச்சி வயப்பட்டுச் சுக்ரீவனுக்குத் தந்த வாக்குறுதியை, அனுமன் நன்கு பயன் கொள்கிறான். வாலி சுக்ரீவன் சண்டையில், மறைந்திருந்து அம்பு எய்யும் அவலம் இராமனைச் சூழ்ந்து கொள்கிறது. வாலி, இராமபாணத்தால் அடியுண்டு தரையில் சாய்கிறான். அவன் அருகில் இராமன் சென்றதும், ஆத்திரத்தில், பலபட, இராமனை நிந்தனை செய்கிறான். வாலியின் வாதங்களைப் பலவாகக் கம்பன் பதிவு செய்கிறான். முதன்முதல் வாலி இராமனை நோக்கி இகழ்ந்து கூறுவதில் இராமா நீ தசரதன் மைந்தன் தானா? என்பது ஒன்று! 'மற்றொன்று' நீ புரதனுக்கு முன்னே பிறந்தவன் தானா என்பது!

அயோத்தியிலிருந்து, பல ஆயிரம் கல் தொலைவில் இருக்கும் கிஷ்கிந்தை வேந்தனான வாலிக்குத் தயரதன் நேர்மையும், பரதனின் சகோதர பாசமும் நன்றாகவே தெரிந்திருக்கின்றன.

'வாய்மையும் மரபும் காத்து மன்உயிர்
துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே நீ பரதன்
முன் தோன்றினாயே?

நீ பரதனுக்கு அண்ணனா என்று, வினாவின் பின்னணியில், பரதனின் தியாகம் முழுவதும், வாலி அறிந்திருந்தான் என்பதை உணர முடிகிறது. மேலும் வாலி பேசுகிறான்.

'- பெற்ற தாதை
பூட்டிய செல்வம் ஆங்கே தம்பிக்குக்
கொடுத்துப் போந்து
நாட்டு ஒரு கருமம் செய்தாய்;
எம்பிக்கு இவ்வரசை நல்கி
காட்டு ஒரு கருமம் செய்தாய்: கருமந்தான்
இதன்மேல் உண்டோ?''

என்ற கூற்றில், அயோத்தி நிகழ்வுகள் யாவும் வாலிக்குத் தெரிந்திருப்பதை உணர்கிறோம்.

அயோத்தி நிகழ்வுகளில், வாலியின் உள்ளம் கவர்ந்தவன் இராமன் அல்லன். நாளை காலை,

இராமன் கோமுடி சூடுவான் என்று நாட்டு மக்களுக்கு உரைத்த உரையை நிறைவேற்ற இயலாத நிலையில், தன் உயிர் நீத்து வாய்மையும் மரபும் காத்த தசரதன், வாலி நெஞ்சில் உயர் இடம் பிடித்துள்ளான். அடுத்துத் தந்தை, தாயுரை கொண்டு வழங்கிய அயோத்தி அரசை ஏற்காது, 'முறைமை அன்று' என்ற முனைப்போடு, அதனை மூத்தவன் இராமனுக்கு வழங்கி அவன் பணித்தவாறு, பாதுகையை அரியணை ஏற்றி, துறவிக் கோலத்தோடு, தவவாழ்வு வாழும் பரதன் அவன் நெஞ்சில் நிறைகிறான். ஆயிரம் காரணங்கள் கூறப் பட்டாலும், மூத்தவன் இருக்க இளையவன் அரியணை ஏறுதல் தகாது என்ற தருமம் காத்த பரதனோடு முன்பிறந்த நீ என்னை வீழ்த்தி, என் இளவலுக்கு நாடு வழங்க முன்வந்துள்ளாய்! இச்செய்கை, உன்னைப் பரதனுக்கு மூத்தோன் என்று கூறிக் கொள்ள நாணம் தருவதாகும் என்கிறான் வாலி. ஒரே குலையில் பழுத்த பழங்கள், தம்முள் சுவை வேறுபடாது, ஒன்று போல் இருக்கவும், ஒரு குடியில் பரதனோடு பிறந்த நீ குணத்தால் மாறுபட்டிருப்பது ஐயம் தருகிறதே என்று வாலி, இராமனை நகையாடுகின்றான். பரதன் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையிலிருந்து, இராமன், ஒரு பாடம் கற்றுக் கொள்ளவில்லை என்பது வாலியின் வாதம். இங்கே பரதனின் நீதியுணர்வு நெஞ்சில் நிறைகிறது!

தம்பியைக் கொல்லத் துணிந்து, தம்பி மனைவியைப் பற்றி வைத்திருக்கும் வாலி போன்றவனின் பாராட்டு மொழிகள், பரதனுக்குப் பெருமையாகுமா என்ற வினா எழுவது இயற்கை.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'

என்ற குறள் நெறி அறிந்தார் நெஞ்சில், இவ்வினா எழ நியாயம் இல்லை. மற்றொன்று, மரணத்தின் வாயிலில் வரும் சொற்களில், பொய்மை இருத்தல் இல்லை. இவ்வுண்மைகள் உணரப்படும் போது, வாலி கூற்றின் மெய்மையும் உணரப்படும்.

வாலியின் இக்கூற்று, இராமனுக்கும் இசைந்ததே என்பதை நிலைநாட்டக் கம்பன் வேறு ஒரு சான்றையும் பதிவு செய்துள்ளான். வாலியை மறைந்திருந்து கொல்வது என இராமன் முடிவெடுத்ததை, இலக்குவன், முன்னதாக ஏற்றிலன். அண்ணா! இந்தச் சுக்ரீவன், தன் அண்ணனாகிய வாலியைக் கொல்லக் கொடுங் கூற்றுவனாக, உன்னைப் பயன் கொள்ள முனைகின்றான். தன் உடன் பிறந்தவனையே கொல்லத் துணியும், இந்தச் சுக்ரீவன், நம் போன்ற அயலாரிடத்து, எப்படி நீதியுடன் நடந்து கொள்வான் என்று எதிர்பார்க்க இயலும்? என்று இலக்குவன் ஐயுற்றுப் பேசுகிறான்.

இலக்குவனின் இந்த ஐய வினாவிற்கு இராமன் தரும் விடையில், அவன் பரதன் பால் கொண்டுள்ள உயர்ந்த எண்ணம் வெளிப்படுகிறது. இராமனின் விடை இரண்டு கூறுகளை உடையது. ஒன்று, சுக்ரீவனும், வாலியும் காட்டில் வாழும் விலங்கினத்தினர். இவர்கள் உறவில், அண்ணன் தம்பி என்ற பாச உணர்வினை, ஆராயத் தேவை இல்லை என்பது. இவ்விடை, இலக்குவனை அமைதிப்படுத்த உரைத்ததே அன்றி இராமன் நெஞ்சார உரைத்ததன்று. இரண்டாவதாக இராமன் கூறுவது.

'எத்தாயர் வயிற்றிலும் பின்பிறந்தார்கள் எல்லாம்
ஒத்தால் பரதன் பெரிது உத்தமன் ஆதல் உண்டோ?

உலகில், தாயர் பலர். அவர் தம் வயிற்று, உடன் பிறந்தவர்கள் எல்லாரும், சகோதர பாசத்தில் தலை நின்று விட்டால், பரதன் போன்றோரை, அன்னாருள் பிரித்தெடுத்து, உத்தமன் என்று பாராட்ட இயலுமோ என்பது இராமன் தரும் விடை. சிறந்த சகோதரனாகத் தன் எதிரில் இருக்கும் இலக்குவனைச் சகோதர பாசத்திற்கு இராமன் உவமை கூறியிருக்க முடியும். ஆனால் இலக்குவன் தன்மேல் கொண்ட பாசத்திலும், மேம்பட்டது பரதனின் பாசம், நீ என் மேல் கொண்ட அன்பு மிகுதியால் பரதனை ஐயுற்றாய்! பரதனோ உடன் பிறந்தார் அனைவரிடமும், ஐயமற்ற, தூய அன்பினைச் செலுத்தினான் என்பதனை, இராமன் உளங் கொண்டிருக்க வேண்டும். அதனால்தான், உலகியல் பேசி, பரதனின் உயர்ந்த சகோதர அன்பைப் புகழ்ந்துரைக்கிறான். அதன் உண்மை உணர்ந்த இலக்குவனும் அக்கூற்றை மறாதொழிகிறான்.

வாலி கூற்றும், அதை ஏற்கும், இராமனது பரதன் பற்றிய உயர் மதிப்பீடும், அப்பாத்திரத்தின் நின்று நிலைபெற்ற புகழுக்குக் கட்டியங்களாக அமைகின்றன.

பரதன் என்ற, உயர்ந்த பண்பாளனை, உள்ளவாறு அறியாது செயற்பட்ட பலர், இராம காதையில் வருகின்றனர். 'தாய் அறியாக் கன்றில்லை! அக்கன்றை ஆயும் அறியும்' என்று, விராடன் துதியுள், கம்பன் உலகியல் காட்டி இறையியல் பேசுவான். ஐந்தறிவு படைத்த தாய்ப்பசுவுக்குக் கூடத் தன் கன்றின் இயல்பு தெரியும். அதற்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்ற தெளிவும், அதற்கு உண்டு. இத்தெளிவு கூட அற்ற தாயாக, இராம காதையில் வரும் கைகேயி, தெரிந்தே, திட்டமிட்டுத் தன் மகன் பரதனுக்கு இழைத்த கொடுமை பெரிது. ஒரு கோணத்தில், இச்செயல் பரதனுக்குத் தாழ்வைத் தந்தது என்றாலும், அதுவே, அவன் புகழ் பூத்து எழவும் இடந்தந்து நின்றது. 'கேட்டினும் உண்டு ஓர் உறுதி' என்ற தொடர், அவனளவில் மெய்ம்மையாகவே அமைந்தது.

'குட்டி குலைத்துத் தாய் தலையில் வைத்தது' என்று ஒரு பழமொழி உண்டு. மனிதர்கள் தெரிந்தும், தெரியாமலும், பல தவறுகளைச் செய்கின்றனர். அவற்றின் பயனை, அவர்கள் மட்டுமே நேராக நுகர்கின்றனர்

என்று கூற முடியாது. சில நேரங்களில் அவற்றின் பயனை, ஒரு குற்றமும் அறியாத அன்னாரின் சுற்றத்தார், நுகர நேர்ந்து விடுகிறது. நாம் போடும் கணக்குகள் யாவும், நாம் நினைத்த விடைகளைத் தருவதில்லை. ஏனெனில், நம்மில் பலர், விடைகளை விரும்பித் தீர்மானித்துக் கொண்டே, வினாக்களைத் தொடங்குகின்றனர். தன் தவறுகளுக்குத் தான் அனுபவிப்பது, புரிந்து கொள்ளத்தக்கது. பிறர் தவறுகளுக்கு, நாம் அனுபவிக்கும் போது அதனை விதி என்று கூறுவதைத் தவிர, வேறு வழி அமைவதில்லை. பரதனுக்கு வந்துற்ற பழியும் அவ்வாறாகவே வந்தது.

கேகய நாட்டிலிருந்து, கைகேயியின் சீதனப் பொருளாக வந்தவள், மந்தரை எனப் பெயர் கொண்ட கூனி. இராமன் இளையனாய், கைகேயி மாளிகையில் விளையாடி மகிழ்ந்த போது, மண் உருண்டைகளை வில்லின் வழி, கூனியின் கூனல் முதுகின் மேல் செலுத்தினான். அவன் பிள்ளை விளையாட்டு கூனி நெஞ்சில், பகைமைத் தீயை வளர்த்தது. பல ஆண்டுகளுக்குப் பின், இராமனுக்கு முடி சூட்டு விழா என்று அறிவிக்கப்பட்டபோது, கூனி சிலிர்த்தெழுகிறாள். மண் உருண்டையால் அடித்தவனுக்கு, இந்த மண்ணாட்சியை இல்லாதாக்குகின்றேன் என்று கருவம் கொள்கிறாள். கைகேயியின் உறுதியற்ற மனப் போக்கை, அவள் பயன் கொள்கிறாள். தசரதன் மாள்கிறான். இராமன் காடு ஏகுகின்றான். இந்தப் பழி வாங்கும் முயற்சியில், கூனி வெல்கிறாள். இவர்களோடு எந்த மன உறவும் அற்ற, பரதன் மேல், பழி வந்து சூழ்கிறது.

அரசரில் பிறந்து, அரசரில் புகுந்த கைகேயி பரதன் என்னும், உத்தம மகனைப் பெறும் பேறு பெற்ற தெய்வக் கற்பினாள். தசரதனின், அன்புக்குரிய இரண்டாம் மனைவி. சம்பராசுர யுத்தத்தில், கைவிரலையே அச்சாணியாகக் கொடுத்துக் கணவனுக்கு வெற்றி தேடித் தந்த வீரமும், விவேகமும் மிக்கவள். இருந்தும், தன் மகன், இதனை விரும்புவானா மாட்டானா என்பதை நுனித்தறியும் அறிவின்றி, கூனி சொற்களால் மனம் மாறிப் பழி சுமக்கிறாள். மகனுக்கு நாட்டாட்சி பெற்றுத்தந்ததாக, அவனுக்கு நன்மை செய்வதாக நினைத்துப் பெரும் பழியை ஈட்டிக் கொள்கிறாள். இம் முயற்சிகள் பற்றி, யாதொன்றும் அறியாது, பாட்டன்வீட்டில் தங்கியிருக்கும் பரதனைப் பழி தேடிச் சென்று பற்றுகின்றது.

ஒன்றும் அறியாது, கோசலம் திரும்பும் பரதனுக்குப் பேரதிர்ச்சிகள் காத்துக்கிடந்தன. கைகேயியிடம்,

**'ஆண் தகை நெடுமுடி அரசர் கோமகன்**
**யாண்டையான் பணித்திர்'**

என வேண்டிநிற்கிறான். சிறுதும் கலக்கமில்லாத கைகேயி,

**'தேன் அமர் தெரியலான் தேவர் கைதொழ**
**வானகம் எய்தினான்: வருந்தல் நீ**

என்று விடை தருகிறாள். பலபட அழுது அரற்றிய பரதன், அண்ணன் இராமன் எங்கே என வினவுகிறான். கைகேயி,

**'தெவ் அடு சிலையினாய் தேவி தம்பி என்று**
**இவ் இருவரொடும் கானத்தான்'**

என்று விடை தருகிறாள். பரதன் துடி துடித்துக் காரணம் கேட்கிறான். அவளோ,

**'வாக்கினால் வரம் தரக்கொண்டு, மைந்தனைப்**
**போக்கினேன் வனத்திடை போக்கி, பார் உனக்கு**
**ஆக்கினேன்: அவன் அது பொறுக்கலாமையால்**
**நீக்கினான் தன் உயிர் நேமி வேந்து'**

என்று சலனம் சிறிதுமின்றி விடை தருகின்றாள்.

கைகேயியின் கொடுமை உணர்ந்த பரதன், கொதித்து மொழியும் சொற்கள் கழிவிரக்கம் மிக்கன.

**'நோயீர் அல்லீர் நும் கணவன் தன் உயிர் உண்டீர்**
**பேயீரே நீர்! இன்னம் இருக்கப் பெறுவீரே!**
**மாயீர்! மாயா வன் பழி தந்தீர்! முலை தந்தீர்**
**தாயீரே நீர்! இன்னும் எனக்கு என் தருவீரே!'**

அன்னை மீது, அவன் கொண்ட கடுங்கோபம், அவளைக் கொன்று தொலைக்கவும் நீண்டிருக்கும். இதனைச் செய்தால் இராமபிரான் கோபிக்குமே என்று, தன் சினம் மாற்றுகின்றான் பரதன். 'தாயே! உன் இந்தச் செயலை, உலகத்தார் ஏற்கமாட்டார்கள்! இனியும், யான் பழி சுமந்து உயிர் வாழ மாட்டேன்: யாதொன்றாலும், உன் பழி தீரப் போவதில்லை! இத்தகு செயல் நடந்த கோசலத்தில், இனித் திருமகள் தரித்திராள். யார் உனக்கு இந்த யோசனைகளைக் கூறியவர்? யாரொடு கலந்தாய்ந்து, இம்முடிவினை மேற்கொண்டாய்? அறம் யாவும் வேரொடு வீழ்ந்து பட்டதே! என்ன காரியம் செய்தாய்!'

ஒன்றோடு ஒன்று தொடர்பற்ற செய்திகளை, அடுக்கி கவிபுனைகிறான் கம்பன். கோபத்தில், கருத்துக்கள் தொடர்ந்து நடையிடா என்ற உளவியல் காட்டுகின்றான் கவிஞன். கோசலையைக் கண்டு, அவள் ஐயுற, சூளுரைத்துத் தன்னைக் குற்றமற்றவன் என்று காட்டி நிற்கிறான். வசிட்டனோடு சென்று, தந்தையின் உருவைக் கண்டு அழுது அரற்றுகின்றான். தயரதன் உடல் எரியூட்ட, சரயு நதிக்கரைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. ஈமப்பள்ளியில், தசரதன் உடல் கிடத்தப்பட்டதும் அருகில் உள்ளோர் 'வீர! நுந்தைபால் பொய் இல் மாக்கடன் கழித்தி' என்று அவனை ஆற்றுப் படுத்தினர். பரதனும், இறுதிக்கடன் இயற்ற முன் வந்தான். அக்காலை, பல்லாயிரவர் கூடி நிற்கும் இடத்தில் வசிட்டன் பரதனைத் தடுத்துக் கூறுகிறான். அதை அடுத்த இதழில் காண்போம்.

★★

# கம்பனும் திருமுறைகளும்

கம்பன் கவிநயமணி, வே. தியாகராசன்

## பதினோராம் திருமுறை

திருமுறைகளில் விசேடமான சிறப்புடையது பதினோராம் திருமுறை. முதல் திருமுறையை அருளிச் செய்த திருஞானசம்பந்தப் பெருமான் ஞானப்பால் கிடைத்துப் பாடியருளினார். என்னைப் பித்தா எனப் பாடுக என சுந்தரமூர்த்திகளுக்கு இறைவனே உத்திர வளித்தார். பதினோராம் திருமுறை சிவபெருமான் பாணபத்திரனுக்காக சேர அரசனுக்கு எழுதியனுப்பி யருளிய திருமுகப்பசுரத்துடன் தொடங்கும். எட்டாம் திருமுறையான திருவாசகத்தைத் தன் திருக்கரத்தால் எழுதிய சிவபெருமான் பதினோராம் திருமுறையின் முதற்பாடலைத் தன் திருக்கரத்தாலே எழுதியருளி னார். பன்னிரண்டாம் திருமுறை இறைவனது திரு வாக்கில் பிறந்த 'உலகெலாம்' என்ற சொல்லுடன் ஆரம்பித்து அந்தச் சொல்லுடன் திருமுறைகள் பூர்த்தி யாகின்றன. திருவாலவாயுடையார் என்னும் மதுரை சோமசுந்தரப் பெருமான், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர் கோன், சேரமான் பெருமாள் நாய னார், நக்கீரர், கல்லாடதேவர், கபிலதேவநாயனார், பரண தேவநாயனார். இளம் பெருமான் அடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பி யாண்டார்நம்பி ஆக பன்னிருவர் அருளிச் செய்ததே பதினோராம் திருமுறை எனத் தொகுக்கப்பட்டது. இது தவிர முருகப் பெருமானைப் பற்றி நக்கீரர் இயற்றி யருளிய திருமுருகாற்றுப்படையும் பதினோராம் திருமுறையில் உள்ளது மற்றொரு சிறப்பாகும்.

சிவபெருமான் திருமுடியில் மதி (பிறைமதி) விளங்குகின்றது. மதுரைமாடங்களில் மதிதவழ்ந்து வருவது கண்டு மதிமலி புரிசைமாடக்கூடல் என்றார். அயோத்தியில் சந்திரன் ஒளிகாரணமாக நகரமே பாற்கடல் போல் விளங்குகின்றது. அதுமட்டுமல்ல. தேவர்களால் கூடக் கண்டு களிக்க முடியாத அயோத்தி யின் அழகைக் காண்பதற்காகவே சந்திரசூரியர்கள் அயோத்தி மதிலுக்கு மேல் சஞ்சரிக்கின்றனர் 'நகரது காண்பான் அமைப்பருங்காதல் முன் பிடித்துந்த அந்தரம் சந்திராதித்தர் இமைப்பிலர் திரிவர்' என்பார் கம்பன். ஆலவாயுடையார் உள்ளும் புறமும் ஒத்திருக் கும் அடியார்கள் போல் அன்னம் பயில் பொழில் ஆலவாய்'' என்றார். கம்பரும் அயோத்தியில் உள்ள பெண்களை அன்ன மென் நடையவர் எனக் குறித்தார். ''அப்படிப்பட்ட மதுரை வாழ் சிவன்யான்'' என்றார்.

**மதிமலிபுரிசை மாடக்கூடல்**
**பதிமிசை நிலவும் பால் நிறவரிச்சிறகு**
**அன்னம் பயில் பொழில் ஆலவாயில்**
**மன்னியசிவன் யான் மொழி தருமாற்றம்**

என்று இந்தத் திருமுகம் (கடிதம்) யாரிடமிருந்து வந்தது எனத் தெரிவித்தார்.

தன்னை வந்தடைந்தவர்க்குப் பருவகால மேகம்போல, மழை பொழிந்து உதவும், பெருங் குதிரைச் சேனைகளையுடைய சேரன் காண்க. என்பது திருமுகப் பாசுரம். கம்பன் இதே கருத்தை ''தன்னிடம் கடல் போல் வந்தவர்களுக்குக் கொடுத்தே தீர்ந்தான். **ஈந்தே கடந்தான் இரப்போர் கடல்** என்றும் தங்கத்தை மழை மாரி பொழிந்தான் **கைம்முறை வழங்கினன் கனகமாரியே** என்றார்.

**பருவக் கொண் மூப்படியெனப் பாவலர்க்கு**
**உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்**

ஒளியுள்ள சந்திரன் மாதிரி எவ்வுயிர்க்கும் இடர் நீக்கும் குடையின் கீழ் அமர்ந்த சேரமான் காண்க:

**குருமாமதி புரை குலவிய குடைக்கீழ்** என்று அவனது வெண்கொற்றக்குடையைக் குறித்தார்.

உலகத்தில் வளர்ந்து தேய்ந்து விளங்கும் சந்திரன் போலல்லாமல் குளிர்நிழல் பரப்பி, இருளான வேதனையைத்தள்ளுவது தசரதனது குடையான படி யால் விண்ணில் விளங்கும் சந்திரன் அதிகமானது எனக்குறித்தார் கம்பர்.

**மண்ணிடை உயிர்தொறும் வளர்ந்து தேய்வின்றி**
**தண்ணிழல் பரப்பவும் இருளைத்தள்ளவும்**
**அண்ணல் தன் குடைமதி அமையுமாதலான்**
**விண்ணிடை மதியினை மிகையின்னதே.**

வெண்கொற்றக் குடையின் கிழமர்ந்து ஆளும் ஆற்றல் மிகுந்த குதிரைப் படையுடையவன் காண்க; 'செருமாவுகைக்கும் சேரலன் காண்க' என்று இக்கடிதம் யாருக்கு என்பதையும் கூறினார்.

**வீணைவாசிக்கும் பாணபத்திரன் உன்போல்**
**என் மீது அன்புடையவன்,**

பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன்

உன்மாதிரி என்மீது அன்புடையவன் என்பதைக் கம்பர் கையாளும் போது, கௌசல்யாதேவி இராம பிரானிடம் பரதனைப்பற்றிக் கூறும் குணவானான அவன் உன்னைக் காட்டிலும் நல்லவன் **நிறை குணத்தவன் நின்னினும் நல்லன்** என்று கூறினார். இத்தகைய புலவன் காண வருகிறான். வாய்திறந்து எதையும் கேட்காத பெரும் புலவன். அவனுக்கு நிறைய பொருள் கொடுத்து, அவனது கலையில் மயங்கி அங்கேயே வைத்துக் கொள்ளாது, நமக்கு அவன் சேவை தேவை எனவே திருப்பியனுப்புக'' என்றார்.

ஒருவருக்கொருவர் எவ்வாறு கடிதம் எழுதுவது என்ற முறையைக் காட்டும் அழகிய கடிதமாக விளங்குவதால் செந்தமிழ்ச் சொக்கனான அங்கயற் கண்ணி உடனாய ஆலவாய்த் தெய்வத்தின் கடிதமான படியால் சிறிது விளக்கியுள்ளோம். அங்கயற் கண்ணி ஆலவாயான் துணை. இராமபிரான் வில்லிறுத்த செய்தியை சனகர் எழுதியனுப்பிய ஓலையை நடந்ததைப் படம் பிடித்துக் காட்டிய மாதிரி எனக் கம்பன் கூறுகிறான். கடிதம் எழுதும் கலை நம் நாட்டினருக்குக் கைவந்த பழைய கலை என்னலாம்.

## 2. காரைக்கால் அம்மையார்

பதினோராம் திருமுறையில் இறைவனுக்கு அடுத்த படி இறைவனால் ''அம்மையே'' என அழைக்கப்பட்டவர், தன் கணவன் தன்னை தெய்வம் என எண்ணி வணங்கியதால், தன் அழகைப் பிறர் காணத் தேவையில்லை என்று இறைவனிடம் பேய் வடிவம் வேண்டிப் பெற்றவர். விரும்பியது கிட்டாது அலைந்து திரிந்து தன்னை அழித்துக் கொண்டு அலைந்து திரியும் பேய் வடிவம் அன்று. சிவ பெருமானின் அருகிலிருந்து பரவிப் போற்றும் தூய்மையுடைய வடிவாக, பதினெண் கணங்களுள் ஒன்றாகிய மேன்மையுடைய பதம் என்பதை **வானமும் மண்ணும் எல்லாம் வணங்கும் பேய்வடிவம்** என்பர் சேக்கிழார். அம்மையாரே தமது அற்புதத் திருவந்தாதியில் **மற்றொரு கண் நெற்றிமேல் வைத்தான் தன் பேயாய நற்கணத்தில் ஒன்றாய நாம்** எனக்குறித்தருளினார். காரைக்காலில் பிறந்தமையாலும், இறைவனால் **''அம்மையே''** எனஅழைக்கப் பட்டதாலும் இவரைச் சைவ உலகம் **காரைக்காலம்மையார்** என அழைத்து வணங்குகிறது. இவர் பிள்ளைத் திருநாமம் புனிதவதி என்பதாகும். பதிகம் பாடும் முறையை இவர் முதலில் தோற்றுவித்தபடியால், யாவருக்கும் முன்னால் பாடிய பெரியவர் என்ற முறையில் இவர் பாடியருளிய திருப்பாடல்கள் **மூத்ததிருப்பதிகம்** என வழங்குகின்றன. வைணவத்தில் பேயாழ்வார் எனவிளங்குவது போல் காரைக்கால் பேய் என இவர் தன்னைக் குறித்துக் கூறுகிறார்.

இறந்தவரை ஈமக்கடன்கள் செய்து, உரிமையானவர்கள் தீவைகக, அந்த எரியையே விமக்காகக் கொண்டு, தேவர்களின் தாளவாத்தியங்கள் ஒலிக்க, தன் சிலம்பின் ஓசையுடன் இறைவன் திருவாலங் காட்டில் ஆடியருளுகிறான் என்கிறார் தமது மூத்த திருப்பதிகத்திலே.

**புந்தி கலங்கி மதிமயங்கி இறந்தவரைப்
புறங்காட்டில் இட்டு
சந்தியில் வைத்துக் கடமை செய்து தக்கவர்
இட்ட செந்தீவிளக்கா
முந்தி அமரர் முழவின் ஓசை திசை கதுவச்
சிலம்பு ஆர்க்க ஆர்க்க
அந்தி மாநடம் ஆடும் எங்கள் அப்பனிடம்
திருவாலங்காடே**

இதைக் கவிசக்கரவர்த்தி கம்பன் **பேயிருங் கணங்களோடு சுடுகளத்து உறையும் பெற்றி ஏயவன்** எனக் கூறிடுவார்.

காரைக்காலம்மையார் தமது திருவிரட்டை மணிமாலையில் ''இறைவனே! உன் திருமுடியிலுள்ள கங்கையை மலைமங்கையான பார்வதி தேவி கண்டால் என்ன செய்வாய்? திரிபுரத்தை எரித்த அம்மையின் கோபத்தைத் தணிக்கயியலுமா? எனவேடிக்கையாகக் கேட்கிறாள்.

**இனிவார் சடையினிற் கங்கை என்பாளை,
அங்கத்திருந்த
கனிவாய் மலைமங்கை காணில் என்
செய்தி? கையிற்சிலையால்
முனிவார் திரிபுரம் மூன்றும் வெந்து
அன்று செந்தீயில் மூழ்கத்
தனிவார்கணை யொன்றினால் மிகக்
கோபித்த எம் சங்கரனே!**

இரு மனைவியருடன் ஒருவன் தன் மூத்த மனைவியை அழைத்துக் கொண்டு மிதிலையில் நடைபெறும் சீதாராமர் திருமணத்திற்கு வருகிறான். ஓரிடத்தில் தங்கிய போது அவனது மனைவி மகிழ்ச்சியிலே அவனது கண்களைப் பொத்துகிறாள். அவன் வீட்டில் விட்டுவந்த மனைவியின் பெயர் சொல்லி ''நீயா'' எனக்கேட்க, தன் கணவன் தன்னை அழைத்து வந்துள்ளாரே தவிர, அவரது இளையவளையே நினைத்துக் கொண்டிருக்கின்றது என கண்ணீர் விட்டாள் என்ற ஊடல்பாடல் ஒன்றைப் பாடியுள்ளார் கம்பன்.

## திருமுகப் பாசுரம்

மதிமலிபுரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மருவிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பாலியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே

\- திருவாலவாயுடையார்

வனை பயில் முன்கை ஓர் மயிலனாள் தனக்கு
இளையவள் பெயரினை கொழுநன் ஈதலும்
முளை எயிறு இலங்கிட முறுவல் வந்தது
கள கள உதிர்ந்தது கயற் கணாலியே.

★★★

சிவபெருமான் தமது திருக்கரத்தில் சிவந்த தீயை வைத்துக் கொண்டு ஆடுவது கண்டு அம்மை யார், தமது அற்புதத்திருவந்தாதியில் ''பெருமானே! தங்கள் கையில் தீயைச் சுமப்பதால் கைசிவந்து விட்டதோ? அல்லது தங்களது செங்கையில் தாங்கிய தால் அந்த தீநெருப்புச் சிவந்ததா கூறுக!'' என்கிறார்.

அழலாட அங்கைசிவந்ததோ? அங்கை
அழகால் அழல் சிவந்ததோ? - கழலாடப்
பேயாடு கானிற் பிறங்க அனலேந்தி
தீயாடுவாய் இதனைச் செப்பு.

இதே கருத்தைக் கம்பனில் காண்போம். இராம பிரான் தேரேறி மிதிலையில் உலாவரும்போது அனேக பெண்கள் அவரைக் காண்கின்றனர். ''கரிய கண்களை யுடைய ஆயிரக்கணக்கான பெண்கள் இராமபிரானைப் பார்த்ததால் அவரது திருமேனி கரியதாகி விட்டதா? அல்லது அந்தக் கரிய மேனித் திருமாலின் கரிய நிறம் அவர்களது கண்விழிகளில் கருமையை உண்டாக்கி விட்டதோ தெரியவில்லையே என்கிறார் கம்பர்.

பஞ்சணி விரலினார்தம் படை
நெடுங்கண்களெல்லாம்
செஞ்சவே ஐயன் மெய்யில் கருமையைச்
செய்தவோதாம்?
மஞ்சன மேனியான் தன் மணிநிறம் மாதரார்தம்
அஞ்சன நோக்கம் போர்க்க இருண்டதோ?
அறிகிலேமால்.

உலாவியற்படலம் - பால காண்டம்

### 3. ஐயடிகள் காடவர் கோன் நாயனார்

அரச போகம் வேண்டாமெனத் துறந்து மக னுக்கு அரசையளித்து ஒவ்வொரு க்ஷேத்திரமாகச் சென்று ஒவ்வொரு பாடல் பாடிய ஐயடிகள் காடவர் கோன் என்ற பெயர் பெற்றவர். இவர் பாடிய 24 பாடல் களே கிடைத்துள்ளன. இவற்றில் யாக்கை நிலை யாமை செல்வம் - பதவி நிலையாமையைப் பாடி யருளியுள்ளார். இந்நூல் க்ஷேத்ர வெண்பா எனப்படும். ''உலக மெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆளும் செல்வத் தைக் காட்டிலும் ஓட்டில் பிச்சையெடுத்து உண்பது இறைவனுக்குத் தொண்டு செய்வது மும்மடங்கு இன்பம் அளிக்கக்கூடியது''.

படி முழுதும் வெண்குடைக்கீழ்ப்
பாரெலாம் ஆண்ட
முடியரசர் செல்வத்து மும்மைக் - கடியிலங்கு
தோடேந்து கொன்றையந்தார்ச்
சோதிக்குத் தொண்டுபட்டு
ஓடேந்தி உண்பதுறும். (10 -வது பாடல்)

''யானையில் ஏறி வருவதும், வெண் கொற்றக் குடையும் தரும் இன்பம் நிலையானதல்ல. நெடுநாள் சாப்பிட்ட எச்சிலை மீண்டும் நுகர்வது இன்பமா? எனத் தசரதர் செல்வம் நிலையாமையக் கூறினார் என்பர் கம்பன்.

கச்சையங் கடகரி கழுத்தின் கண்ணுறப்
பிச்சமும் கவிகையும் பெய்யும் இன்னிழல்
நிச்சயமன்றெனின் நெடிது நாளுண்ட
எச்சிலை நுகருவது இன்பமாகுமோ? என்றார்.

வாழ்க்கை நிலையற்றது. இளமையும் அவ் வாறே. மரணம் வருமுன் இறைவனையடைய வேணும் என்றார். வயது முதிர்ந்து கூனிக்குறுகி ஒரு கையில் தடியூன்றி நொந்து இருமல் கொண்டு வாய் வழிக் கோழை வருமுன் திருவையாற்று இறைவனை நினைக்க வேண்டும் என்கிறார் ஐயடிகள்.

குந்தி நடந்து குனிந்தொரு கை கோலூன்றி
நொந்து இருமிஏங்கி நுரைத்தேறி - வந்து உந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை (3 - வது பாடல்)

கும்பகர்ணனை இராமபிரானிடம் வந்து சேரு மாறு வீடணன் அழைத்த போது நீர்க்குமிழி போன்ற அழியும் வாழ்வை விரும்பி என்னை வளர்த்த அண்ணனுக்கு துரோகம் செய்யமாட்டேன்.

நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிது
நாள்வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டார்க்கு
உயிர்கொடாது அங்கு போகேன்

அழியும் செல்வத்திற்கும் ஆயுளுக்கும் ஆசைப் படேன். எனக்கு அரசும் வேண்டாம் என வெறுத்தான் கும்பகருணன். கம்பன் நில்லாத இளமையை அனுப வித்து மரணத்திற்கு வருமுன் துன்பமான மூப்பை **''எரிகின்ற மூப்பு - ஏவுண்ட நோவு''** என்பர். செல்வ மும் இளமையும் அழியத்தக்கவை. இறைவனது அருள் தான் **நிற்கின்ற செல்வம்** என்பர். எனவே ஐயடிகள் காட்டும் வழியில் இறைவனை வணங்கி உய்வோம்.

### சேரமான் பெருமாள் நாயனார்

''தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே'' என்றபடி இப்பெரியார் சுந்தரமூர்த்தி நாயனாரை வணங்கி பக்தி செய்து, சுந்தரமூர்த்திகள் வெள்ளையானையில் ஏறிக் கைலாயம் செல்வ தறிந்து, தன் குதிரையின் காதில் இறைவனின் அஞ் செழுத்தைக் கூற, அது அவரைச் சுமந்து கொண்டு, வெள்ளையானையில் அமர்ந்து சென்று கொண் டிருந்த சுந்தரமூர்த்திகளை மும்முறை வலம்வந்து கைலாயத்தையடைந்தது. பின்னர் சுந்தரமூர்த்திகளை முன் னிட்டுக் கொண்டு கைலை நாயகனை தரிசித்து அருள் பெற்று சிவகணங்களில் ஒன்றாக விளங்குகிறார் அவர் அப்பொழுது இறைவன் சன்னிதானத்தில் பாடியது திருக்கைலாய ஞான உலா என்ற பிரபந்தம். திருச்சிக்கும் பெரம்பலூருக்கும் இடையே உள்ள திருப்பிடவூர் மகாசாஸ்தா என்ற ஐயனார் மூலம் உலகத்திற்குக் கிடைத்தது.

இவரது முதற்பாடல் **பொன்வண்ணம்** எனத் தொடங்கிப் **''பொன் வண்ணம்''** என முடிவதுடன் நூறுபாடல்களும், ஒவ்வொரு பாட்டின் கடைசி வார்த்தையும் அடுத்த பாட்டின் முதல் வார்த்தையாக வருவதாக அமைவதால் **(அந்தம் + ஆதி)** இதற்குப் பொன்வண்ணத்தந்தாதி எனப் பெயரிடப்பட்டது. பொன் மேனியனான சிவபெருமானைக் கண்டு ஆசை கொண்டு அவரைக் கிடைக்கப்பெறாது நூறுபாடல் கள்பாடி ''பொன்னிறமான சிவபெருமான் எழுந்தருளி யுள்ள மலையினருகே சென்ற காக்கையும் பொன் னிறமடைந்து விளங்குகிறது யானும் அவ்வண்ண மானேன்'' என நிறைவித்தார்.

இறைவனின் திருமேனி பொன் வண்ண மாகவும், அவரது சடை மின்வண்ணமாகவும் வெள்ளி மலை எவ்வாறோ அவ்வாறே அவரது காளை வாகனமும், அவரைக் கண்ட என்னிறம் ஆசை கொண்டு வெண்ணிறமான மாதிரி அவரது திருமேனி யும் ஆயிற்று என்றார் முதல் பாடலில்.

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
பொலிந்திலங்கும்
மின் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை: வெள்ளிக்குன்றம்

## வருமுன் காத்திடுக

தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணாது
பெட்டப் பிணமென்று பேரிட்டுக் - கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை

- ஐயடிகள் காடவர்கோன்

தன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்,
தன்னைக் கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ண
மாகிய ஈசனுக்கே

கல்லுருவான அகலிகை முன் உருவம் கொண்டு நிற்க, விசுவாமித்திரர் இராமபிரானிடம் அகலிகை வரலாற்றைக் கூறியதில் ''வண்ணம்'' என்ற இவ்வார்த்தையையே கம்பர் கையாண்டருளினார்.

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்
இனியிந்தவுலகுக் கெல்லாம்
உய்வண்ணம் அன்றி மற்றோர் துயர் வண்ணம்
உறுவதுண்டோ?
மைவண்ணத்தரக்கி போரில் மழை
வண்ணத்தண்ணலேயுன்
கைவண்ணம் அங்கு கண்டேன் கால்வண்ணம்
இங்கு கண்டேன்.

இவ்வழகிய பாடலின் பொருள் வெளிப் படை. எனவே உரை எழுதவில்லை,

## திருக்கைலாய ஞான உலா

சிவபெருமான் தேவர்கள் புடை சூழ தெய் வீகமான மாதர்கள் இசைபாட தெருவில் உலாவருவது கண்டு பெண்டிர் இறைவனது அழகில் ஈடுபடுவது பற்றிப் பேசப்படுகிறது. உலகில் நம் போன்றவர் இவ்வாறு ஆசை கொண்டால் அது சிற்றின்பமாகக் கருதப்படும். இறைவனேநாயகன் அவனால் உண் டாக்கப்பட்ட நாம் அனைவரும் பெண்கள் என நினைக்கும் நாயக நாயகிபாவத்துடன் கூடிய நிலை பேரின்ப நிலை. எனவே இதை **திருக்கைலாய ஞான உலா** என்றனர்.

கம்பன் மிதிலையில் இராமபிரான் உலா வந்தது கண்டு பெண்கள் பல விதமாகப் பேசிக் கொண்டிருந்தனர் என்பதை உலாவியல் படலம் எனப்பாடியருளினார்.

அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே
ஆற்ற வல்லார்

## எல்லாம் இறைவனுக்கே

சிந்தனை செய்ய மனம்
அமைத்தேன் செப்பநா அமைத்தேன்
வந்தனை செய்ய தலை அமைத்தேன்
கைதொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற்கு அன்பு
அமைத்தேன் மெய் அரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறு அணி ஈசற்கு
இவையான் விதித்தனவே
- சேரமான் பெருமாள் நாயனார்

என்று உணர்ச்சியின் வேகத்தைக் காட்டுவதுடன் இராம பிரானும் **ஆடவர் பெண்மையை அவாவும் தோளி னன்** என எத்தகைய அழகுடையவராயிருந்தார் என்கிறார் கம்பர்.

உலாப்பிரபந்தம் முதன் முதல் பாடியவர் சேரமான் பெருமாள் நாயனார் என்பர். அதைத் தழுவியே கம்பனது உலாவியல் படலமும் பரஞ் சோதி மாமுனிவரின் வளையல் விற்றபடலமும் அமைக்கப்பட்டன எனத் தோன்றுகின்றது.

சேரமான் பெருமாள் அருளிச் செய்த திரு வாரூர் மும்மணிக் கோவையும் அகத்துறைப் பாடல் களாகவே அமைந்துள்ளன. வட மொழியில் இறை வனைத் தலைவனாகவும் தன்னைத்தலைவியாகவும் எண்ணிப் பாடும் அஷ்டபதி என்று வடமொழியில் இலக்கியம் உண்டு. விரித்து எழுதினால் இந்நூல் மிகப்பெரிதாகி விடும். இறைவனருள் செய்யின் மிகப் பெரிய நூல் ஒன்று எழுத ஆவல். ஆண்டவன் அருள்க.

★★★

# தைப்பூசம் கொண்டாடுவோம்

- முனைவர் த. அமிர்தலிங்கம்

தமிழ்மக்களால் சிறப்பாக போற்றப்படும் நாட்களில் தைப்பூசம் ஒன்று. திருஞானசம்பந்தர் தம் திருமயிலைப் பதிகத்தில்

''மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலை
கைப்பூசு நீற்றான் கபாலீச்சுரம் அமர்ந்தான்
நெய்ப்பூசு வொண்புழுக்கல் நேரிழையார்
கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பா வாய்''

எனப் பாடியிருப்பதால், 1300 ஆண்டுகளுக்கு முன்னமே தமிழகத்தில் தைப்பூச விழா சிறந்திருந் தமையை அறியலாம்.

தைப்பூசத் திருநாளில் ஆலயங்களில் தெப் போற்சவத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. தைப்பூச நாளிற் தெப்போற்சவம் நடத்து வதால் உலகம் செழிப்புப் பெறும் என்று நம்பப்படு கிறது. தேவர்களும் தேவரிசிகளும் கூட பூலோகம் வந்து தைப்பூசநன்னாளில் புனலாடித் தெப்போற்சவத் தையும் கண்டுமகிழ்வர். இத்தைப்பூசப் புனலாடுதலின் சிறப்பினைத் திருஞானசம்பந்தர்

''பூசம் புகுந்தாடிப் பொலிந்து அழகாய
ஈசன் உறைகின்ற இடைமரு தீதோ''
''வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர்
வந்தீண்டிப்
பொருந்தியத் தைப்பூச மாடி உலகம்
பொலிவெய்த''

என்று போற்றிப் பாடியிருக்கிறார்.

திருநாவுக்கரசரும்,

''பாசம் ஒன்றிலராய் பலபக்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈசனெம் பெருமான் இடை மருதினில்
பூச நாம் புகுதும் புனலாடவே''

என்று தைப்பூசப் புனலாடலைப் போற்றியிருக்கிறார்.

தைப்பூசத் திருநாளை ஒட்டித் தெப்பத்திரு விழா நிகழ்த்துவது சிவாலயங்களில் பெரிதும் வழக்க மாய் இருந்து வருவதன்தத்துவத்தையும் நாம் தெளிந்து கொள்வது அவசியமாகும். பிறவியாகிய கடலில் நாம் சிக்கித் தவித்து வாடுகிறோம்.

''பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்''

என்பது மணிமேகலை. பிறவியாகிய கடலைக் கடக்க வேண்டுமானால் இறைவன் திருவடியாகிய தெப்பத் தில் ஏறிக்கொள்ள வேண்டும் என்பதைத் திரு வள்ளுவர்

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்''

என்ற குறளில் உணர்த்தியிருக்கின்றார்.

இறைவர்திருவடியாகிய தெப்பத்தைப் பற்றிக் கொள்ளாவிடில் மாணிக்க வாசகர் தம் திருவாசகத்தில் பாடியுள்ளபடி

''புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து''

வாட வேண்டியது தான். பட்டினத்தாரும் பாடி யுள்ளபடி

''அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பின்னை எத்தனை எத்தனைப் பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனைப் பிள்ளையோ
முன்னம் எத்தனை எத்தனைச் சென்மமோ
மூடனாய் அடியேன் ஒன்றும் அறிந்திலேன்
இன்னும் எத்தனை எத்தனைச் சென்மமோ
என்செய்வேன் கச்சி ஏகம்ப நாதனே''

என்றும் பாடி உழலவேண்டியதுதான்.

இப்படி உழலாமல் வாடாமல் வருந்தாமல் நோகாமல் துடிக்காமல் முத்தியின்பம் பெற வேண்டு மானால் இறைவன் திருவடியாகிய தெப்பத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த் திடும் பொருட்டே தைப்பூச நன்னாளில் தெப்போற்ச வங்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன என்பதை நாம் தெளிந்து கொள்ளவேண்டும். மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் ஒரு வாசகம் இக்கருத்தை இவ்விதமே தெளிவுபடுத்துகிறது. அப்பொன்வாசகம் வருமாறு:

''மருவினிய மலர்ப் பாதம்
மனத்தில் வளர்ந்து உள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச்
சிவபெருமான் என்றேத்திப்
பெருகிய நின் பரங் கருணைத்
தடங்கடலில் படிவாமாறு
அருள்எனக் கிங்கு இடைமருதே
இடங் கொண்ட அம்மானே''

தைப்பூச நன்னாளில் தெப்பவிழாக்களை நிகழ்த்தி ஈசருடைய திருவடிகளைச் சிக்கெனப் பிடித்துக் கொள்வோம்.

★★

# இராகு நவகிரகமான வரலாறு

- திருமதி பட்டம்மாள் ஆனந்தா

நவகிரகத்தில் ஒன்றான இராகு தற்சமயம் சிம்மராசியிலிருந்து கடகராசிக்குச் சென்றதும், கேது கும்ப ராசியிலிருந்து மகர ராசிக்குச் சென்றதும் யாவரும் அறிந்ததே.

சாயாகிரகமான இராகு 'விப்ரசித்தி'' என்ற அசுரனுக்கும் ''ஸிம்ஹிகை'' என்பவளுக்கும் பிறந்தவர். பிரஹ்லாத ஆழ்வாருடைய அத்தை ஸிம்ஹிகா. அவளது புத்ரன் ஸைம்ஹிகேயன்.

திருப்பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்த வரலாறு நாம் யாவரும் அறிந்ததே. தேவ அசுரர்க்கு மோகினி அமிர்தம் அளிக்கும் போது ஸைம்ஹிகேயன் அசுர பந்தியில் அமர்ந்திருந்தான். அமரர்க்கே அதை அளித்து அசுரரை ஏமாற்றி விடுவார் என்றறிந்து ஸைம்ஹிகேயன் சுக்கிரன் அருளால் தேவவடிவம் பெற்று அமரர் இடையே அமர்ந்தான். அமிர்தத்திற்காகக் கையை ஏந்தினான். மோகினி அவதாரம் கொண்ட ஸர்வக்ஞனான பிரபு அமிர்தம் கொடுத்து விட்டார். அதை அவன் அருந்தியும் விட்டான். சூரிய சந்திரர் இதை ஜாடை காட்டிட, மோகினி தன் கையிலிருந்த சட்டுவத்தில் சக்கரத்தை (திருமாலுக்குரிய சக்கரம்) விட்டு அவன் கழுத்தை வெட்டினார். இரண்டு துண்டாகியும், அமிர்தம் உண்டதால் அவன் இறவாமல் தலை இராகுவாகவும், உடல் கேதுவாகவும் உடல் பெற்று எழுந்தான். தேவர் விரும்பியபடி பகவான் அவனை முதலில் கொன்றார். பிரஹ்லாதனுக்கு அவனது உறவினரைக் கொல்லுவ தில்லை என்று வாக்களித்தபடி ஸிம்ஹிகேயனை மீளவும் எழுப்பினார். அமிர்தம் உண்டு அமரர் ஆனதால் அமரர் கோஷ்டியில் சேர் என்றார். அதிலும் சந்திர சூரியர்களுடன் கிரகமாக இருக்கச் செய்தார். இராகு, கேதுக்கள் சேருவதற்கு முன் ஏழு கிரகங்களே இருந்தன. அதனால் அந்த ஏழுபேர் பெயரிலேயே வாரத்தின் ஏழு நாட்கள் அமைந்தன. தவத்தினாலும் பகவான் அருளாலும் இவர்களும் நவகிரகபதவி அடைந்தனர்.

அமிர்தத்தைக் கள்ளத்தனமாகப் பெற்று அருந்திய இராகுவின் கழுத்து அறுபட்டுப் போக, அப்பொழுது அவன் தொண்டையிலிருந்து நிலத்தில் வீழ்ந்த அமிர்த ரஸத்துளிகள் ரஸோனங்கள் அல்லது லசுனங்கள் என்ற வெள்ளுள்ளிகளாக (பூண்டு) மாறின. இந்தப் பொருள் அசுரனுடைய உடலிலிருந்து உண்டானபடியால் ஆசார சிலர் இதை புசிப்பதில்லை. இது அமிர்தத்திலிருந்து நேராக உற்பத்தியானதால் இரசாயனங்களுள் முதன்மையானது. இரசாயனம். எனப்படுவது மனிதன் நீண்ட ஆயுள், ஞாபகசக்தி, விசேஷ புத்தித்திறமை, ஆரோக்கியம், இளம் வயதிற்குரிய நிலைமை, தேககாந்தி, சிறந்த தேக நிறம், கம்பீரமான குரல் வன்மை, தேகபல இந்திரியங்களின் வளர்ச்சி, தேக வளப்பம் இவைகளைப் பெற உபயோகிக்க வேண்டிய ஔஷதம்.

★★★

## அழுக்குகள் அகற்றும் வழி

அழுக்காறு, அவா, வெகுளி, செற்றம் ஆகிய மன அழுக்குகளை அகற்ற இறைவனைத் தியானம் செய்தல் வேண்டும்.

பொய் கூறல், புறங்கூறல், கடுஞ்சொற் கூறல், பயனிலவாம் சொற் கூறல் ஆகிய மொழி அழுக்குகளை அகற்ற இறைவனைத் துதித்தல் வேண்டும்.

பொல்லாத செய்தல், புல்லியன செய்தல் போன்ற மெய் அழுக்குகளை அகற்ற இறைவனை வழிபாடு செய்தல் வேண்டும்.

இவ்வாறு செய்யின் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் உண்டாகும் அழுக்குகளை அகற்றிவிடலாம்

- சிவப்பிரகாச சுவாமிகள்

# மகாவித்துவான் பிள்ளையவர்களின் இலக்கியங்களின் பெருமை

- அங்கயற்கண்ணி அடிமை

திருவாவடுதுறை அம்பல வாணதேசிகர் என்ற பெரியவர்கள் மீது இவர் பாடிய பிள்ளைத் தமிழில் அவர்களை ஐம்பூதங்களான பூமி, தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றோடு ஒப்பிட்டுப் பாடியுள்ள பாடல் மிக அழகாக அமைந்துள்ளது. ''தீமையான புறச் சமயத்தவர் வாயுள் நுழைந்து சிவநிந்தை செய்யாது அவர் வாய்களையடைக்கும் மண்ணே! நற்றொண்டு செய்யும் நம் சைவப்பயிர் தழைத்துவளர உதவும் தண்ணீரே! விரசமாகப் பேசுப வர் பாவங்களை அழிக்கும் நெருப்பே! மெய்யடி யார்களின் பாவங்களை விரட்டித் தூய்மை செய்யும் காற்றே! உன் திருவடி வணங்குபவர் உள்ளத்தில் பரவி வாழும் ஆகாயம் போன்ற வெளியே! எனச் செங்கீரைப் பருவத்தில் பாடியருளுகிறார்.

**பரசமயத்தவர் வாயுள் நுழைந்து**
**பயின்றிடும் பிருதிவியே!**
**பற்றிடு தொண்டின் வழிப்படு**
**சைவப்பைங்கூழ்பாய் புனலே!**
**விரச வழுத்துநர் வெவ்வினை அடவி**
**வெதுப்பி எழும் கனலே!**
**மெய்யுற நோக்கிநர் பாவமெனும் துய்**
**விலக்க உலாம் வளியே!**
**வரசாணத்தின் மனத்தை நிறுத்தி**
**வயக்கி முயக்குறுவான்**
**மாதவம் ஆற்றுநர் உள்ளந்தோறும்**
**வளைந்து விராம் வெளியே!**
**அரசவனத்தமரும் குருநாதன்! ஆடுக செங்கீரை!**
**அறிவுருவாகிய அம்பலவாணா! ஆடுக**
**செங்கீரை!**
**- செங்கீரைப்பருவம் 6-வது பாடல்)**

இப்புலவர் பெருமான் பாடிய நூல்களை அனைவரும் பாடி மகிழ்ந்து தெய்வீக இலக்கிய இன்பம் பெறத் தூண்டுகோல் போன்று மிக அழகிய பாடல்களை மட்டும் மேற் கோள் காட்டி எழுது கிறோம். அன்பர்கள் எல்லா நூல்களையும் படித்து இன்புற வேண்டுகிறோம்.

★★★

திருச்சி குளித்தலையருகில் உள்ள வாட் போக்கி என்ற தலம் பற்றி நம் பிள்ளையவர்கள் ஒரு கலம்பகம் பாடியருளினார். ''இறைவனே! பசித்து அழுதகாலை சீர்காழிப் பிள்ளை உன் மூலம் ஞானப் பால் அருளப் பெற்று உன் புகழ் பாடினார். தன் தோளில் சூலம், ரிஷபமுத்திரைகள் பெற்று அப்பர் பெருமான் பாடினார். ஆற்றில் பொன்னையிட்டுத் தம் ஊர் குளத்தில் எடுத்துக் கொண்ட சுந்தரர் பாடி னார். கனவிலும் காணவரிய உன்னை ஒரு குதிரைச் சேவகனாக வருமாறு செய்த மணிவாசகர் பாடினார். உன் திருச் செவிகள் கேட்டருளினாய். அத்தகைய உன் மீது கல்லாத அறிவிலி நற்குணமற்ற நானும், பற்று விட்டவர்க்கன்றி மற்றவர்க்குக் கிடைக்காத உன் அருளை வேண்டி, கொடிய நஞ்சினை அமுதாகக் கொண்டு அருளிய நீ என் பாடல்களை ஏற்று குற்ற முள்ள என்னையும் குணவானாகக் கொண்டு அருள்வாய் என எண்ணிப் பாடும் என் பாடல்களை நல்லனவாக ஏற்று விரைந்தருள்க!'' என அவை யடக்கம் பாடினார்.

இறைவனது **பாதகமலம்** பக்தர்களின் **பாதகம்** (குற்றத்தை) **மலம்** படச் செயயும் என இரட்டுற மொழிகிறார்.

என் **மூன்று** மலங்களை எடுத்து கொண்டு உன் ஒரு பொருளான அருளைத்தந்தருள்க எனக் கேட் கிறார். இது பால், தேன், பாகு, பருப்பு ஆகிய **நான்கை ஏற்று முத்தமிழையருள்க** என்ற ஔவைப் பிராட்டியின் கருத்தை ஒத்து வருகிறது. (**அம்பல வாணதேசிகர் கலம்**பகம் 27-வது பாடல்).

★★★

எளிய நடையில் பல நூல்களை எழுதிய நம் பிள்ளையவர்கள் கடுந்தமிழிலும் எழுத முடியும் என்பதைக் காட்டுவது போல் திருத்தில்லையமக அந்தாதி, துறைசையமக அந்தாதி, திரிசிராமலையமக அந்தாதி, திருக்குடந்தை, திருவிடைமருதூர், திருப் பைஞ்ஞீலி முதலான ஊர்களின் மீது திரிபந்தாதி பாடியருளினார். ''இனிமையும் நீர்மையும் தமிழெனப் படுமே'' என்பதற்கு எதிர்மொழி போல் சில நூல் கள் இவர் பாடிய போதிலும் எல்லாவிதமான

நூல்களையும் பாடவல்லமையுள்ளவர் என்று நாம் நினைக்க வைக்கின்றன இந்நூல்கள்.

★★★

வழுவூருக்கு அருகிலுள்ள பாலையூர்ச் சிவ பெருமான் மீது ஒரு அந்தாதி பாடியருளினார். உலோபியிடம் சென்று ''கருணைக்கடலே! கற்பகத் தருவே! என்றெல்லாம் கவிபாடும் அன்பர்களே! அம்மையப்பனான பாலையூர்ச் சிவபெருமானைப் பாடினால் நிறைவேறாத காரியமுண்டோ?

இறைவனை வணங்கி திருநீறு அக்கமாலை அணியாதவர் எமக்கு ஒரு பொருளாக எண்ணத் தக்கவரல்ல. அவர் தவவேடம் புனைந்து பாலை வனத்துப் பெருமானை வணங்கவில்லை என்றால் எமக்கு ஒரு பொருளாகத் தோன்றார்.

**அருந்தவம் பன்னாளும் வனமாதியத்தேத்திருந்து**
**நனியமைந்தேரேனும்**
**பெருந்தவம் மாமறை பல கற்றாரெனினும்: மகம்**
**புரிந்த பெரியாரெனினும்**
**இருந்தவர் சூழ் பாலை வனத்து எம்மானுக்கு**
**அன்பினராய் எழில்விபூதி**
**பொருந்தவ அவவிர் கண்மணி பூணாதவரேல்**
**எமக்கோர் பொருளாகாரே.**

இது அப்பர் பெருமானின் **''திருநாமம் அஞ்செழுத் தும்''** என்ற பாசுரத்தைத் தழுவிய கருத்துடையதாகக் காணப்படுகின்றது.

★★★

## வினாவும் விடையும்

***வினா :*** **''பஞ்சபுராணம் ஓதுதல்'' என்பதன் விளக்கம் யாது?**

***விடை :*** மூவர் அருளிய தேவாரத்திலிருந்து ஒரு பாடல்.

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்திலிருந்து ஒரு பாடல்

ஒன்பதாம் திருமுறையில் சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டில் இருந்து ஒரு பாடல்.

ஒன்பதாம் திருமுறையில் உள்ள 'திருவிசைப்பா'' பாடல்களிலிருந்து ஒரு பாடல், சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்திலிருந்து ஒரு பாடல் ஆக 5 பாடல்களைப் பூசை வேளைகளில் பாடுதல் ''பஞ்சபுராணம் ஓதுதல்'' எனப்படும்.

திருஞானசம்பந்த சுவாமிகள் பதிற்றுப்பத் தந்தாதியின் முதல் பாடல்

**சீர்பூத்ததிருமுகமும்: தேவிமுலைப்பால்**
**பூத்த செவ்வாயும்**
**ஏர்பூத்த அருள் பொழியும் இருவிழியும்:**
**பொற்றாளம் ஏந்துகையும்**
**பேர்பூத்த திகழ்க் கூடல் திருஞானசம்பந்தப்**
**பெருமான் செய்ய பொன்**
**தார்பூத்த சிறுதண்டைத் தாளும் உளத்து**
**உள்ளி வினைதள்ளி வாழ்வாம்.**

என ஞானசம்பந்தப் பெருமானின் திருக்கோலத்தை நம் கண் எதிரில் காட்சியாகக் கிடைக்கச் செய்கிறார்.

''எம் பெருமானே! கூன் பாண்டியனின் கூனை நிமிர்த்த நீ பிறந்து இறந்து உழலும் என் கூனிய வாழ்க்கையை நிமிர்த்தக்கூடாதா? எனக் கேட்கிறார்.

திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட அன்று சமணர்கள் நஞ்சு உண்டமாதிரியாகினர். இறைவன் தந்த சிவிகையில் சம்பந்தப் பெருமான் ஏறியபோது சமணர்கள் கழுவேறிய மாதிரி உணர்ந்தனர். சம்பந்தப் பெருமான் வாழ்க்கைச் சம்பவம் ஒவ்வொன்றையும் சைவத்தின் வெற்றியாகக் காட்டியுள்ளது இன்பமளிக் கின்றது.

★★★

''கலைசைச் சிதம்பரேசுவர் மாலை'' என்ற நூலில் பெருமானே! உன் திருக்கூத்தின் எதிரில் பேய்க் கூத்து நன்றாக இராது. அதுபோல் உன் னடியார்களின் பாடல்களின் முன் என் பாடல்கள் நன்றாக இராது என்கிறார்.

எம்பெருமானே! என் நெஞ்சு கல் நெஞ்சு. அதனால் என் நெஞ்சில் எழுந்தருள மறுக்கிறாய். நீ அமர்ந்திருக்கும் கைலையே கற்பாறை தானே! அங் கிருப்பது மட்டும் தகுதியா? என ஒரு வினோதமான கேள்வியை எழுப்புகிறார்.

★★★

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளை கற்பனைக் களஞ்சியம் என்பர். திருவண்ணாமலையை ஒரு முறைவலம் வருவதற்குள் சோண சைல மாலை என நூறுபாடல்களைப் பாடியருளினார் என்பது வர லாறு. அக்காலத்தில் திருச்சியில் பாலம் கிடையாது. அக்கரையிலுள்ள திருவானைக்கா, திருவரங்கம் முதலான இடங்களுக்கு ஓடமேறிச் செல்தல் வழக்கம்.

நம் பிள்ளையவர்கள் ஒருநாள் திருச்சியில் ஓடத்தில் ஏறி திருவானைக்கா சென்று அகிலாண்ட நாயகியம்மையை தரிசித்து மீண்டும் திருச்சி வருவதற்குள் அவ்வம்மை மீது **அகிலாண்ட நாயகி மாலை** என்று நூறு பாடல்களைப் பாடியருளினார் என்பது வரலாறு.

*1. ''அம்மையே! நான் கொடியவன் என என் எதிரில் வர அஞ்சுவானேன்? இயமனை எட்டி உதைத்த உன் நாயகரைத் துணைக்கு அழைத்து வரலாமே'' எனத் தான் அம்மையப்பர்களை ஒன்றாக தரிசிக்க விரும்புவதை விநோதமாக வெளியிடுகிறார்.*

*2. அம்மையே! உன் திருக்கரத்தில் உள்ள கிளியின் மொழியையும், உன் அருமைச் செல்வனான முருகப் பெருமானது மழலையையும் சிவபெருமான் உன்னுடன் இனிமையாகப் பேசும் சொற்களைக் கேட்ட உனக்கு என் மொழி எவ்வாறிருக்குமோ? என்கிறார்.*

*3. அன்னையே! நீ அலங்காரம் செய்து கொள்ளும் போது உன் அழகை நீ காண்பதற்கு உன் தோழிகள் கண்ணாடி காட்டுவர். நீ சிவ பெருமானது இடது புரத்தில் அமர்ந்து அம்மையப்பராகக் காட்சி கொடுப்பவள். கண்ணாடியை நோக்கும்போது இடதுபுறம் வலப்புறமாகக் காட்சி கொடுக்கும். இறைவனது வலப்புறத்திலும் ஒரு பெண் இருப்பதாக எண்ணி அவரைக் கோபித்து விடாதே என்று கற்பனையாகக் கூறுகிறார்.*

அகிலாண்ட நாயகி மாலை என்னும் நூல் கற்பனையும் பக்திச்சுவையும் நிரம்பிய ஒரு அழகிய நூல். அது தினமும் படித்துப் பாராயணம் செய்து இன்புறுவதுடன் அம்மையின் அருளை அள்ளித்தரும் நூல்.

ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறுபதம் பார்ப்பது போல் விரித்து எழுத இடமில்லாமையால் கருத்துக்களை மாத்திரம் கொடுத்துள்ளோம். பிள்ளையவர்களின் நூல்களைப்படித்து இன்புற எமது கட்டுரைகள் தூண்டுகோலாக அமையும் என நம்புகிறோம். உன்னை நினைந்துருகி வணங்குவோருக்கு எதுவுமே பயமில்லை. சூரியன் எங்கு உதித்தால் என்ன? என்று தாம் பெற்ற இன்ப நிலையைப் பிள்ளையவர்கள் காட்டுகின்றார்.

**ஒப்பில் நின் புகழே கேட்க என் செவி; கண்**
**ஓங்கு நின் உருவமே காண!**
**தப்பின்று உனையே பாடிட வாய்! கை**
**தவாது நின்னடிப் பணியாற்ற:**
**இப்படியுறுமேற் செங்கதிர் உதயம்**
**எத்திசை எழினும் மற்றென்னே!**
**கப்பினர் தருக்கள் சூழ் திருவானைக்கா**
**அகிலாண்ட நாயகியே!**

பிள்ளையவர்கள் திருநாமம் வாழ்க! எந்தாய் மொழி எங்கும் பரவி இன்புற்று வாழிய உலகெலாம்.

★★★

## வினாவும் விடையும்

**வினா :** *''பஞ்ச சமஸ்காரங்கள்'' என்றால் என்ன? விளக்குக*

**விடை :** ஸ்ரீவைணவர்களுக்கு மிக முக்கியமாக அமைய வேண்டிய ஐந்து அங்கங்கள் புஞ்ச சம்ஸ்காரங்கள் எனப்படும்.

இவை (1) சங்கமும், சக்கரமும் ஆகிய இவற்றின் இலக்கினையைத் தோள்களில் அணிதல்

(2) நெற்றியில் திருமண் காப்பு அணிதல்

(3) 'தாசன்' எனும் பெயர் தரித்தல்

(4) திருமாலின் திருமந்திரத்தை உச்சரித்தல்

(5) திருமகள் நாதனை ஆராதித்தல்


இவ்வைந்து அங்கங்களையும் உடையவர்கள் ஆதல் பற்றியே ''ஐயங்கார்'' என்ற வழக்காறும் ஏற்படுவதாயிற்று.



சிவபெருமான் ஆடும் சித்திரசபை

(திருக்குற்றாலம்)

பதிவு எண். T.N (MSC) 7039 / WPP / 325 / 99



திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசி விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர் இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாவில் பங்குகொண்டு சிறப்பித்தார்கள். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பரமபத தரிசனம் கண்டு மகிழ்ந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லி**ட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.